விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- பத்து Registered as a News paper in Sri Lanka.

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 06 வெள்ளிக்கிழமை (19.04.2002) தொலைபேசி 3378 ஒலி 121

சமாதானப் பேச்சுக்கு முன்னதாக

புலிகளின் தடையை நீக்க சட்டத்தில் தடை இல்லை!

சட்ட வல்லுனர்கள் அரசுக்கு ஆலோசனை

(நமது நிருபர்)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தடையாக உள்ள "விடுதலைப் புலிகள் மீதான தடை" நீக்கிவிடுவதினால் எந்தவிதமான பின் விளைவுகளும் ஏற்படப் போவதில்லை என சட்டத்துறை வல்லுனர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஜுன் மாதம் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதால் அப் பேச்சுவார்த்தைக்கு முன்பதாக விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கிவிடவேண்டும் என்று தலைவர் வே. பிரபாகரன் வற்புறுத்தி வந்துள்ளார்.

கடந்த பொ.ஐ.ஐ.முன்னணி ஆட்சிக் காலத்தில் கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக இலங்கையில் தடை செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து உலக நாடுகள் சிலவும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்து அதனைத் தடை செய்திருந்தனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற அமெரிக்கா மீதான தாக்குதலை அடுத்து ஐக்கிய நாடுகள் சபை இரண்டு முக்கிய தீர்மானங்களை எடுத்திருந்தன. இத்தீர்மானத்தில் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்புச் சேர்த்துக் கொள்ளப் படவில்லை

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவதற்கு அது ஒரு பெரும் சுமையாகவோ பிரச்சினையாகவோ இருக்கமாட்டாது என்று சட்டமா அதிபர் கமல சபேசன்

(10ம் பக்கம் பார்க்க)

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிட்டால் தடையை நீக்கலாம்

ஜே.வி.பி ஆலோசனை கூறுகிறது

(கொழும்பு) கார்

அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு இன்று நல்லூரில்

இசைக் கலைஞர்களும் பங்கேற்பு

பிரதிநிதிகள், தமிழ்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 14வது நினைவு தின நிகழ்வு இன்று பி.பகல் 4.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் உணர்வு பூர்வமாக இடம்பெறவுள்ளது.

கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் க.சிவசீலன் தலைமையில் ஈகச்சுடர் ஏற்றுதலுடன் ஆரம்பமாகி, மதத்தலைவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் மன்றப் பிரதிநிதிகளும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், அன்னையர் முன்னணிப் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள், தமிழீழ

(10ம் பக்கம் பார்க்க)

மனிதநேய அமைப்புக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் தலைவர், செய

யாழ்-கொழும்பு நேரடி பஸ் சேவை இன்று ஆரம்பம்

அமைச்சர் மகேஸ்வரன் ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு இன்று பயணிகள் பஸ் சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

இதனை இன்று காலை 8.30 புக்கான ஒரு வழிப்பயணக் கட்டணமாக 150 ரூபா அறவிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பஸ் புறப்பட்டு (முக

ஜே.வி.பி ஆலோசனை கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே அவர்கள் மீதான தடை நீக்கப்படவேண்டுமென ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் மூலம் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படுவதாயின் அவர்கள் ஆயுதங்கள் உட்பட ஈழக் கோரிக்கை, தமிழ்த் தேசியம் என்பனவற்றைக் கைவிட வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் ஐக்கிய தேசிய

(10ம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை நாளை காலை 9 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் கூடுமாறு, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் அரசியல் பிரிவினருடன் முக்கிய சந்திப்பு இடம்பெற இருப்பதால் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

பிற்கு இன்று பயணிகள் பஸ் சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

இதனை இன்று காலை 8.30 மணிக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைப்பார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்

என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பஸ் புறப்பட்டு முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் பயணிகளை இறக்கி விட்ட பின்னர் பயணிகளை முகமாலையில்

(10ம் பக்கம் பார்க்க)

தமிழீழத்தைப் பெற்ற பின்னரே புலிகள் ஆயுதத்தைக் கைவிடுவர்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகத்தினைப் பெற்றுவிட்ட விடுதலைப் புலிகள் தமிழீழத்தைப் பெற்றபின்னரே ஆயுதத்தைக் கீழே வைப்பார்களென சிஹல உறும்ய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் திம்புக் கோட்பாட்டிலிருந்து துளியளவும் விலகப்போவதில்லை. அத்துடன் அவர்கள் தமிழீழத்தைப் பெறும் வரையில் ஆயுதத்தையும் கைவிடப்போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது உறுதியான நிலைப்பாடு தொடர்பாக கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெளிவாகக் கூறிவிட்டனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் தொடர்பான தமது அரசின் நிலைப்பாடு என்னவென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை தெளிவுபடுத்தவில்லை.

அரசும்-புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நன்மை அடைந்தவர்கள் விடுதலைப்புலிகளே.

எனவே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கோரியுள்ளார். (த)

அரசு புலிகள் பேச்சு

நோர்வே தூதுக்குழுவுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்வு

(மட்டக்களப்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொள்வது தொடர்பாக அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நோர்வே தூதுக்குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றைய தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அலுவலகத்திற்குச் சென்ற நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், சமாதான தூதுவர் எரிக் சொல்கெய்ம் ஆகியோருடன் அமைச்சர் ஹக்கீம் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பாக ரவூப் ஹக்கீம் நோர்வேக் குழுவினருக்கு விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை

(10ம் பக்கம் பார்க்க)

புலிகள் — கூட்டணி நேற்று சந்திப்பு

(திருநெல்வேலி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினருக்கும் இடையேயான சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் அலுவலகத்தில் இடம் பெற்றது

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

இராசி பலன்

19-4-2002
(சித்திரை 6, வெள்ளி)
சப்தமி பி.இ 2.47 வரை
திருவாதிரை மு.ப 9.32
ராகுகாலம்10.32-12.02
நல்லநேரம் 6.02-7.32

மேடம்
காரியம் கைகூடும், பொருள்சேர்க்கை பிரயாணநன்மை, வாக்குப் பலிதம்.

இடபம்
குடும்பசுகம், தேவையற்ற வார்த்தை மனக்கிலேசம், முயற்சி தாமதம்.

மிதுனம்
சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சிகைகூடும், சயனசுகம், பெரியோர் மதிப்பு.

கடகம்
உணர்ச்சி வசப்படல், காரியதாமதம், பொருள் விரயம் சயனசுகக் குறைவு.

சிங்கம்
தெய்வ தரிசனம், காரிய நன்மை, எதிர்பாராத நன்மை, செல்வாக்கு

கன்னி
நல்லசம்பவம், சந்தோசமானசெய்தி, முயற்சிபலிதம் தொழில் விருத்தி,

துலாம்
கட்டுப்பாடு உடல் வியாதி காரியதாமதம், இனசனத் தொடர்பு.

விருச்சிகம்
முயற்சி கைகூடும், அமைதிக்குறைவு, உறவினர் வெறுப்பு, பிரயான பயம்

தனுசு
நண்பர்கள் உதவி, சுவாரஸ்யம், பிரயாண சுகம்,காரியநன்மை.

மகரம்
முயற்சி பலிதம், தொழில் விருத்தி, உடல் நலம், மன மகிழ்ச்சி.

கும்பம்
குடும்பக் கவலை, காரிய சித்தி, பெரியோர் ஆதரவு போசன சுகம்.

மீனம்
மனப்பதற்றம், வாக்குக் கலகம், காரியதாமதம்,உடல் நலக்குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

காந்தியதேசத்திற்கு அகிம்சை போதித்த அன்னை பூபதி

இன்று அவரின் 14 வது நினைவு தினம்

இந்தியவல்லாதிக்கம் அமைதிகாக்கும் படை எனப் பெயரிட்டு தமிழீழத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட படையினரின் அராஜக நடவடிக்கைகளை எதிர்த்து மட்டக்களப்பில் மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுவதற்கு அமைதிப் படையினரின் பிரிகேடியர் சந்தோஷ் பாண்டே, இந்தியத் தூதுவர் தீக்ஷீத் ஆகியோர் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியைத் தழுவியவேளை உண்ணாவிரதப் போராட்டம் சாகும் வரையிலான போராட்டமாக வலுப்பெற்றது.

அன்னை பூபதி கணபதிப் பிள்ளை அவர்கள் 19.3.88ல் சாகும்வரையிலான உண்ணாவிரதப்போரை ஆரம்பித்தார்.

போர்நிறுத்தம் செய்ய வேண்டும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்திய அமைதிப்படையிடம் முன்வைத்தே அன்னை பூபதி தனது உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.

'நான் எனது சுயவிருப்பத்தின்பேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணாவிரதம் இருக்கின்றேன். நான் நினைவிழந்து போகும் நிலை ஏற்பட்டாலும் என்னுடைய கணவரோ, பிள்ளைகளோ, உறவினர்களோ என்னைக் காப்பாற்றவோ தூக்கிச் செல்லவோ அனுமதிக்கக் கூடாது' என்று முன்கூட்டியே கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டே உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.

எம்மைப் பாதுகாக்கவென வந்த இந்திய அமைதிப் படை இன்று சிறிலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாக மாறி விட்டனர். இதனைத் தடுக்க லாம் என்ற மனஉறுதியுடன் இந்தப்போரை ஆரம்பித்துள்ளேன். வீரச்சாவுகளைக் கண்டு நாம் பழகிப் போனவர்கள். இதில் அன்னையர் முன்னணி ஒருபோதும் தளரமாட்டாது என உண்ணா நோன்பிருந்த அன்னை பூபதி

-தமிழன்

சூளுரைத்தார்.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று முழங்கிய தியாகி லெப். கேணல் திலீபனின் வழியில் 31 நாட்கள் அறப்போர் நடத்தி அன்னை 19.4.88 செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்குத் தியாகச்சுடரானார். மட்டக்களப்பு நாவலடிக் கடற்கரையில் சங்கமமான அன்னை பூபதி இன்று தமிழீழத்தின் தியாகிகளில் மேலானவராக மதிக்கப்படுகின்றார்.

'ஒரு சாதாரண தாயின் அசாதாரண துணிவாகவும் அலாதியான தேசிய பற்றுணர்வாகவும் அன்னை பூபதியின் அறப்போர் அமைந்திருந்தது தர்மத்தின் குரலாக தனித்துநின்று அவர் ஒரு சாம்ராச்சியத்தின் அதர்மத்தை எதிர்த்தார் நீதியின் நெருப்பில் தன்னை எரித்து எதிரிக்கு சவால் விடுத்தார்' என்று தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அன்னை பூபதிக்கு புகழஞ்சலி செலுத்தியிருந்தார்.

தமிழீழவிடுதலை அனலை வேரோடு கருவறுக்க வந்த இந்திய அமைதிப்படை ஒரு புறம் சிங்களபடைகள் மறு புறத்திலுமாக நிற்க தமிழீழ தேசம் கலங்கிய வேளையிலேயே அன்னைபூபதி தனது அறப்போர் மூலம் தமிழீழத்திற்கு இன்னுயிரை ஈர்ந்தார்.

'சத்தியத்திற்காக துணிந்து விட்டால் சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரம் படைக்கும்'என்பதற்கேற்ப அன்னை பூபதி சரித்திரம் படைத்த நாயகியாகஇன்றும் எம்மோடு வாழ்கிறார்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும்சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள் என்பதை நிஜத்தில் செய்து காட்டியவர் அன்னைபூபதி. இன்று அவர் அழியாத சரித்திரம் படைத்து விட்டார். தமிழ் கூறும் நல்லுலகம் உள்ள வரை அன்னை பூபதி யின் தியாக உருவம் ஒவ்வொரு தமிழ் மக்களின் உள்ளத்திலும் நிழலாடும் என்பது திண்ணம்.

பூபதித் தாய்க்கு மலரஞ்சலி

தங்கத் தமிழின் தாழ் நிலை கண்டு
பொங்கும் உரிமைக் கோரிக்கை உயர்த்தி
திங்கள் முழுதும் உண்ணா நோன்பு நோர்த்து
சிங்களக் கூலி பாரதப் படையின் இனச் சதிக்கு
மங்களம் பாடிய பூபதித் தாய்க்கு எம்
வெம்பிடும் உள்ளத்து மலர்களால் அஞ்சலி
ஓங்கும் உன் பெயர் தமிழுள்ள வரை
நீங்கும் எம்துயர் உன்தியாக உறுதியால்

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

ஆரியகுளம் சந்தி ஊடாக இன்றுமுதல் பேருந்துசேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பலாலி, மற்றும் பருத்தித்துறை வீதி ஊடான பேருந்துச் சேவைப் பாதையில் இன்று முதல்புதிய நடைமுறை அமுல்ப்படுத்தப் படவுள்ளது.

இதன் பிரகாரம் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் பேருந்துக்கள் கஸ்தூரியார் வீதி வழியாகச் சென்று ஸ்ரான்லி வீதி ஆரியகுளம் சந்தி ஊடாகச் செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

பயிர்ச் செய்கையில் ஈடுபாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட வயல்களில் 12 வருடங்களின் பின்னர் முஸ்லிம்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (உ-8)

திருஞானசம்பந்தரின்

காணப்பட்டது. பிறமொழி மதக்கலப்புகளின் செல்வாகும் வலுவொழிந்தது. அன்பு நெறியால் அனைத்தையும் சீர் செய்யலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே பிறந்தது. சிறுவர் முதல்முதியோர் வரை ஒன்று பட்டு வழிபாட்டு நடைமுறையால் வாழ்வியலைச் செம்மைப்படுத்த சம்பந்தரின் தமிழ் மாலை வழிவகுத்தது. சம்பந்தருடைய தமிழ்மாலை அப்பர், சுந்தரர், மணிவாசகர் போன்ற இறை நெறி பேணியோர்க்கும் வழிகாட்டியாக அமைந்தது. செந்தமிழால் ஒரு வாழ்வியல் இணைப்பைஏற்படுத்தினால் அதுவே மனிதர்களின் இடர்களையும் மரபுக் கயிறாக நின்று நிலைக்கும். மொழியினால்மக்களின்உணர்வைத் தட்டி எழுப்பி உள்ளத்தை உறையவிடாமல் எல்லோரும் இன்பமாய் வாழ்வதற்காக ஏற்ற பணிகள்செய்யலாம். தமிழ்மாலை அணிந்து செல்ல சம்பந்தர் வழிகாட்டினார். அந்த வழி இன்று வரைக்கும் ஏற்ற நல்வழியாக இருக்கின்றது. மக்களை ஒருங்கிணைக்கும் தமிழ்மாலை உலகத்தையே இணைக்கும் ஆற்றல் பெற்றது என்றால் மிகையாகாது. ●

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

கூறுவிலை கோரல்

மூன்று அங்குல விட்டமுள்ள புட்வால்விற்கு நல்ல தரமான பதப்படுத்திய தோல்பகுதி உரிய வடிவில் வெட்டப்பட்டு தேவைப்படுகின்றது. கைவசம் வைத்திருப்போர் உரிய மாதிரியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் அத்தியட்சகர் அவர்களை பராமரிப்புப் பகுதியில் 23. 04. 2002 இற்கு முன் அலுவலக நாட்களில் காலை 8.30 - 10.30 க்கிடையில் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ். பல்கலைக்கழகம்
த. பெ. இல: 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C-3979)

குரும்பசிட்டி
கிராம அபிவிருத்திச் சங்கம்
அமரர்
ஆ. மகாதேவன்
நினைவுப் பரிசு நிதியம்

இதுவரை கிடைத்த நிதி விபரம்:

01.	அமரரது குடும்பத்தினர்	25000.00
02.	Science Hall	25000.00
03.	குரும்பசிட்டி . அ. சங்கம்	20000.00
04.	பலாலி ஆசிரியர் கலாசாலை	16250.00
05.	யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்	1700.00
06.	கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி	2200.00
07.	உரும்பிராய் இந்துக்கல்லூரி	1800.00
08.	சென்.ஜோன்ஸ் கல்லூரி	540.00
09.	மகாஜனக் கல்லூரி	2700.00
10.	வயாவிளான் ம.ம.வி	7250.00
11.	யாழ். இந்துக்கல்லூரி	2300.00
12.	கொக்குவில் இந்துக் கல்லூரி	1500.00
13.	யாழ். இந்து மகளிர் கல்லூரி	2750.00
14.	திரு. A.K. சிவஞானம்	1000.00
15.	திரு. வி. சச்சிதானந்தன்	1000.00
16.	திருமதி. றெ. இருதயநாதன்	1000.00
17.	திருமதி. கோகிலா மகேந்திரன்	1000.00
18.	திரு. க. மகேந்திரன்	1000.00
19.	செல்வி. P. நாகரத்தினம்	1000.00
20.	திரு. R. மருதலிங்கம்	1000.00
21.	திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி	1000.00
22.	செல்வி. இ. இராமச்சந்திரன்	1000.00
23.	திரு. S. குணசீலன்	5000.00
24.	திரு. ஆ. கோபாலமூர்த்தி	100.00
	மொத்தம்	123090.00

மேலும் நிதி உபகரிக்க விரும்புவோர் தொடர்பு

ஆ. சி. நடராசா
ஓய்வு பெற்ற அதிபர்,
உரும்பிராய்.

(4980)

'பண்பாடு' மனித சமுதாயத்தின் செம்மைநிலை, திருந்திய அறிவுநிலை என்பது தமிழர் கொள்கை

பேராசிரியர்

க. ப. அறவாணன்

(M.A. , B. O. L. M, Lit)

பண்பு, பண்(பு), பண்படு, பண்பாடு ஆகிய சொற்கள் உறவுடைய சொற்களாக வழங்கப்படுகின்றன. இவற்றுள் பண்பாடு என்ற சொல் பழந்தமிழ் வழக்கன்று. பிற்கால மொழி வழக்கு. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை பண்பாடு என்ற சொல்லை 1937ல் டி.கே.சி தமிழுக்குக் கொண்டு வந்த புதுச்சொல்என்கின்றார். பல் கலைக்கழக தமிழ் - ஆங்கில பேரகராதி பண்பு, பண், பண்படு என்ற சொற்களுக்கு மட்டும் விளக்கம் தருகிறது. பண்பாடு என்ற சொல்லை அகராதி விளக்கவில்லை. 20ம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட சொல் என்பதனால் இச்சொல்லை விட்டிருக்க வேண்டும்.

நாகரிகம்

பழந்தமிழ் இலக்கியத்தில் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) பண்பாடு என்ற சொல்வழக்கு காணப்படவில்லை. காவிய கால, பக்திக்கால இலக்கியத்துள்ளும் காணவில்லை. நாகரிகம் என்பதைப் பற்றிய குறிப்பு நற்றிணை 355 வரி 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்') கலித்தொகை மருதக்கலி 9 (நஞ்சு உயிர் செகுத்தலும் அறிந்து உண்டாங்கு) திருக்குறள் 550 (பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்) ஆகிய இடத்தில் வழங்கப்படுகிறது. ஈதன்றி பண்பு திருவள்ளுவர் கூறிய பண்புடமை என்ற அதிகாரத்திலும், நெய்தற் கலியிலும் 16 வழக்குகள் காணப்படுகின்றன. இவை எல்லாம் (Culture) கல்ச்சர் என்பதன் பொருளை முழுமையாகத் தாங்கியிருக்கும் சொற்கள் என்று கூறுவதற்கில்லை.

பண்படு. பண்பாடானது

பண்பாடு என்ற சொல் வரலாறு பற்றியோ, பொருள் திட்பம் பற்றியோ தெளிந்த முடிந்த கருத்துக்களில்லை. பண்பு + படு = பண்பாடு. பண் + படு = பண்பாடு என்றும் தமிழ் வாணர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். பண்பு என்ற சொல்லிற்கு குணம், தகுதி, விதம், சுபாவம், முறை என்ற பொருள்கள் உண்டு. பண் என்பதற்கு அகராதியில் 21 பொருள்கள் காட்டப்படுகின்றன. இவ் விரண்டு சொற்களுக்குரிய பொருளுக்கும் பண்பாடு என்ற சொல்லுக்கு உரிய பொருளுக்கும் இணக்கமான ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. பண்டி + படுதல் = பண்பாடு ஆயிற்று என்பதில் பகர, உகரம் கெட்டதற்குத் தக்க காரணம் காட்ட இயலவில்லை. ஆகையால் இவ்விரு சொற்களை மூலச்சொற்களாகக் கொண்டு பண்பாடு என்ற சொல் உருவாயிற்று என்ற கருத்து பொருத்தமாயில்லை.

பண்படு என்ற சொல் தமிழில் அண்மைக்காலமாக வழங்கிவரும் வினைச்சொல் இச்சொல்லை ஆங்கிலப்படுத்தும் தமிழ் ஆங்கிலப் பேரகராதி **to become refined or to reform** என்று பொருளுரைக்கிறது. 'பண்பட்ட செந்தமிழ்' என்பது தனிப்பாடல் இச்சொல்லின் பொருள் செம்மைப்படுத்தல் அல்லது சீர்திருத்தல் என்பதாகும்.

பண்பாடு (Culture) மனித சமுதாயத்தின் வளர்ந்த நிலை செம்மைப்பட்ட நிலையே ஆம். ஆகையால் சீர்திருத்துதல் என்ற பொருளுடைய பண்பாடு என்ற சொல்லடியாக பண்பாடு என்ற சொல் வந்ததென்பது பொருத்தமாகும். மொழியியல் படி உடன்படு - உடன்பாடு செயல் படு - செயற்பாடு என்ற வழக்குகளைப் போல பண்படு - பண்பாடு என்றாகியிருக்கலாம் என்று கொள்தலே பொருத்தமாம். (வழிபடு - வழிபாடு)

பண்பாடு சொற்பொருள் விளக்கம்

பண்பாடு மாந்தரின் வளர்ந்த நிலையை மட்டும் அன்றி சமுதாயத்தின் படிந்த நிலையையும் எடுத்துக்காட்டுகின்றது. வளர்ந்த நிலை என்பது பின்னர் வந்த சொத்து படித்த நிலை என்பது சொந்தச் சொத்து, இந்த இரு நிலைகளையும் தாங்கிய ஒரு சொல் பழந்தமிழ் இலக்கியத்தில் வழங்கவில்லை. **Culture** என்பது ஆங்கிலத்தில் இரு பொருளில் கையாளப்படுகிறது. மாந்தர் இயலிலும் தத்துவ இயலிலும் இச்சொல் வழங்குகிறது. ஒவ்வொரு காலத்திலும் மாந்தர்கள் இயற்றிக்கொண்ட கருவிகள் அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் அவர்களது சமயம் பற்றிய கொள்கைகள் முதலியன இச் சொல்லில் அடங்கும். தத்துவ இயலில் மக்களது அறிவு நலம், கருத்து நலம், குண நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மேலும் மேலும் வளர்ந்து திரிந்து வரும் நிலையைக் குறிக்கும். இப்பொருள் தத்துவ அடிப்படையில் தரப்படும் விளகம் முன்னே கூறியதுமாந்த இயல் அடிப்படையில் தரப்பட்ட விளக்கம். மத்தேயு அர்னோல்ட் முதலிய இலக்கியப் பேராசிரியர்கள் இரண்டாம் பொருளுக்கு விளக்கம் தந்துள்ளனர். தமிழ் அறிஞர்கள், தமிழ் வரலாற்றாசிரியர்கள் இப்பொருளிலேயே இச்சொல்லைக் கையாளுகின்றனர். இதனைத் தமிழ் மக்கள் அடைந்துள்ள திருந்திய அறிவுநிலை என்று கருதலாம்.

இந்தப்பொருளில்(மத்தேயு அர்னோல்ட் கூறும்பொருளில்) கல்ச்சர் என்பதனை உள்ளடக்கிய நேர்ச் சொல் பழைய தமிழில் இல்லை. என்றாலும் பண்பு, நாகரிகம், பண்புடமை ஆகிய சொற்களை ஓரளவு இதே பொருளில் பழந்தமிழர் கையாண்டிருக்கின்றனர். 'பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்' (நெய்கல் கலி 16) எனவரும் கலித்தொகை அடியும் திருக்குறள் பொருட்பாலில் உள்ள பண்புடமை என்ற அதிகாரத்திற்கு (100அதி) பரிமேலழகர் தரும் 'பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்று எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்' என வரும் உரைவிளக்கம் பண்பு, பண்புடமை என்ற சொற்களின் ஆட்சிக் குச்சாட்சியங்களாகும்.

நாகரிகம் என்ற சொல் திருந்திய அறிவு நிலை என்ற பொருளில் சங்க இலக்கியத்திலும், திருக்குறளிலும் வழங்கியிருக்கிறது. சான்று முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் (நற்றிணை 355 பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர். (திருக்குறள் 580) என வருபவை இதற்குச் சான்றுகளாகும்.

எது பண்பாடு

கடவுள் முதலில் ஒவ்வாரு பக்சள் கூட்டத்திற்கும் களிமண்ணாலான கோப்பையை அளித்தார். அவர் அதனின்று தங்கள் வாழ்வைப் பருகினர்.

நிக்ஸ் இந்தியப் பழங்குடி உண்ணுவதிலும் விளங்கும் மாந்தரும் ஒரு போக்கினர் எண்ணுவதிலும் எடுத்துரைப்பதிலும் மாந்தன் விலங்கிடமிருந்து வேறுபட்டிருக்கிறான் மாந்தன் ஒருவனே கற்கும் ஆற்றலும் கற்பிக்கும் ஆற்றலும் உடையவனான விளங்குகிறான் கற்று கற்பிக்கும் ஆற்றல் பெற்று மாந்தன் துய்ப்பதிலும் சில விதக்கட்டுப்பாடுகளை எடுத்துக் கொள்கிறான் இயல்பான படித்த பண்புகளல்லாமல் அவனாகப் படிந்த பண்புகளுமே அவன் வாழ்வோடு கலக்கின்றன. ஆகவே பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற வகையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழக்கங்கள் பற்றிபஒருவித வாழ்க்கை முறையே ஆகும். ஒவ்வொரு சமுதாய மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு எனப்படும். நடத்தை இரு வழிபாக அவனைச் சாருகிறது. ஒன்று மரபு (பாரம்பரியம்) வழியாகப் பெற்றது. மற்றது கல்வி வழியாகப் பெற்றது. பரம்பரையாக ஒரு தலை முறையினரிடமிருந்து அடுத்த தலை முறையினர்க்கு மரபு வழியே வரும் நடத்தைக் கோவையே என்கிறார் மார்க்ரெட்மீட்.

(தொடரும்

பொ.ஐ.மு அங்கத்துவ கட்சிகளுக்குள் பிளவு

மேதினக் கூட்டமும் தனித்தனியே

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டங்களில் இணைந்து கொள்வதில்லையென தீர்மானித்துள்ளன.

லங்கா சமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்காகம்யூனிஸ்கட்சி என்பனவே இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி தனது கூட்டணிக்கட்சிகளினை நடத்திய விதமே அக்கட்சிகளின் இந்த அதிருப்திக்த காரணம் என கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியில் அதிருப்தியடைந்துள்ள இவ்விரு கட்சிகளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளிற்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது . (உ-8)

ஐ.தே.மு. உறுப்பினரை முதல்வராக நியமிக்குக

சட்டமாஅதிபர் அறிவுறுத்து

(கொழும்பு)

மத்தியமாகாண சபையின் முதலமைச்சராக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கைஎடுக்குமாறுசட்டமா அதிபர் கமலசபேசன் மாகாண ஆளுநர் ரத்நாயக்காவை அறிவுறுத்தியுள்ளார்.

மத்திய மாகாண சபையில் ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்டுள்ள போதிலும், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரே ஆளுநராக இருந்துவருகின்றார்.

இதனால் இந்தவருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதுடன் மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீடும் இடை நிறுத்தப்பட்டது.

இதனை அடுத்தே மத்திய மாகாண சபையால் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவைக் கொண்ட ஒருவரை உடனடியாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் கமலசபேசன் மத்தியமாகாண சபையின் ஆளுநர் கே.பி.ரத்நாயக்காவுக்குஉத்தரவிட்டுள்ளார். (த)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுடன் இணைந்து

தொண்டர் ஆசிரியர்கள் நேற்று அடையாள மறியல் போராட்டம்

கோரிக்கைகளை நிறைவேற்ற 10 நாள் அவகாசம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுமாக நூற்றுக்கணக்கானோர் இணைந்து நேற்றைய தினம் காலை 7.00மணிமுதல் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி மேலதிகமாகாணக் கல்விப்பணிமனை முன்பாக ஒருநாள் அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற 29ஆம் திகதிஅவகாசம் வழங்கியுள்ள தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறுமிடத்து29ஆம் திகதி முதல் தமது அடையாள மறியல்போராட்டத்தை தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகங்களை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை, மறியல் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் போராட்டத்திற்கான காரணங்களைக் கவனமாகக் கேட்டறிந்ததுடன், அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளனர். (உ-6)

பணி நயப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரமபிள்ளையின் பணிநயப்புவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி. ப.2.30 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மூளாய் சைவப்பிரகாச வித்தியா சாலை ஆசிரியர் ந.சபாரத்னசிங்கிதலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா, யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. ஏ. ஏ. போல் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள். (எ)

மறியல்போரில் காணப்பட்ட வாசகங்கள்

(யாழ்ப்பாணம்)

நியமனத்தை உடன் வழங்கக்கோரி நேற்றையதினம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் தாங்கியிருந்த சுலோகங்களில் காணப்பட்ட வாசகங்களாவன.

- நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வின் அடிப்படையில் நியமனங்களை உடன் வழங்குக
- எங்கள் சேவைக்கு உங்கள் பதில் என்ன?
- சேவை செய்ய நாங்கள், நியமனங்கள் வேறு யாருக்குமா?
- நாம் என்றும் தொண்டரா?
- தொண்டர் ஆசிரியர்களை ஏளனம் செய்யாதே.

(உ-6)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் றோ. க. த. க. பாடசாலையை இரண்டாந் தவணை தொடக்கம் சொந்த இடத்தில் இயங்க வைப்பது குறித்து மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு மிருசுவிலில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 08

பகுதி I

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

கீழே காணப்படுகின்ற இரண்டு படங்களுக்கிடையே ஐந்து வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அவற்றை அருகிலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.





1 ..... 2 .....
3. ..... 4..... 5.....

தரப்பட்ட விவரணத்தைக் கவனமாக வாசித்து 6~11 வரையான வினாக்களுக்கு விடைதருக.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிறந்த தமிழ் அறிஞர்களுள் இவர் தலை சிறந்தவராகப் போற்றப்படுகிறார். இவர் தமிழுக்கும் சமயத்துக்கும் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை, பல நூல்களை எழுதினார், பழம் தமிழ் நூல்கள் பலவற்றை அச்சு இயந்திரசாலை நிறுவிப் பதிப்பித்தார். பல பாடசாலைகளைக் கட்டி கல்விப் பணி புரிந்தார். பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் 1822ம் ஆண்டு பிறந்து 1879ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

6. இவ்விவரணம் யாரைப் பற்றிக் கூறுகிறது?
.....
7. இவர் பிறந்த ஊர் எது?
.....
8. தமிழ் நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனத்தால் இவருக்கு வழங்கப்பட்ட பட்டம் எது?
.....
9. இவர் அச்சேத்திய நூல் ஒன்றின் பெயர் தருக?
.....
10.இவர் எழுதிய நூலொன்றின் பெயர் தருக?
.....
11.இவர் இறக்கும் போது எத்தனை வயது?
.....

கீழே தரப்பட்ட அட்டவணையை அவதானித்து 12 ~ 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.

4 x M = 32 20 - 15 = S
K + 7 = 10 54 ÷ 6 = V

12. MVSK - VMS
13. 2MV6 + KVSM 1SKM
14. MVSK x M
15. V|MVK7÷
16. V+S - M+K

கீழேயுள்ள உருவங்களில் மூன்று உருவங்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்திருக்கின்றன. இரு உருவங்கள் வேறுபட்டுள்ளன. வேறுபட்ட உருவங்களின் இலக்கங்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

17.


18.


19.


20 ~22 வரையான வினாக்களுக்கு முதல் உருவின் பிரிக்கப்பட்ட பகுதிக்குப் பொருத்தமான உருவின் கீழ்க் கோடிடுக.

20.


21.


22.


வலம்புரிப் பத்திரிகையில் வெளியான விளம்பரம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அதை அவதானித்து 23 ~ 26 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A/L கணிதம், பொருளியல், நாடகமும் அரங்கியலும், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் திறமை மிக்க பட்டதாரி ஆசிரியர்களால் வீட்டுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.
TEL 735894

23. கல்வி கற்பித்தல் எங்கே நடைபெறும்?
.....
24. எந்த வகுப்பிற்கு கற்பித்தல் நடைபெறும்?
.....
25. நான்கு பாடங்களும் ஒரே ஆசிரியரால் கற்பிக்க முடியுமா?
.....
26. ஆசிரியர்களிடம் பாடம் கற்க விரும்பின் எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும்?
.....

குறியீடுகளுக்கு வழங்கப்பட்ட எண்களை அவதானித்து 27 ~ 29 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A 18 B 15 C 8 D 6

27.


28.


29.

30. காந்தன் எட்டு மணித்தியாலங்களில் செய்யும் வேலையை யோகன் 6மணி 45நிமிடத்தில் முடிப்பான். காந்தன் 8.00மணிக்கு வேலையை ஆரம்பித்து பி.ப 4.00 மணிக்கு வேலையை முடித்தான். யோகன் 4.00 மணிக்கு வேலையை முடிக்க வேண்டுமாயின் எத்தனை மணிக்கு வேலையை ஆரம்பிக்க வேண்டும்?
.....

மூன்று அவதானக் குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து 31 ~ 33 வரையான வினாக்களுக்கு விடையின் இலக்கத்தை கூட்டில் எழுதுக.

31.
★ சன சமூக நிலையத்தின் அவ்வருட வரவு செலவு விபரத்தை எழுதினார்.
★ எழுதிய விபரங்களை வாசித்தார்.
★ அதைச் சபையில் சமர்ப்பித்தார்.
அவர் (1) பொருளாளர் (2) கணக்காளர் (3) எழுது வினைஞர்

32.
★ பாடசாலையில் நடைபெற்ற விழாவின் போது வந்த அவருக்கு அதிபர் மாலை அணிவித்தார்.
★ வரவேற்று அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தினார்.
★ அவர் பரிசுகளைக் கொடுத்தார்.
வந்தவர் (1) கல்வி அதிகாரி (2) பிரமுகர் (3) பிரதம விருந்தினர்

33.
★ புலமைப்பரிசில் பரீட்சை ஆடி மாதம் நடைபெற்றது
★ புரட்டாதி மாதம் பெறுபேறுகள் வந்தன
★ நான் வெட்டுப் புள்ளிக்கு 2 புள்ளிகள் குறைவாகப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்தேன்.
இக் கூற்று (1) பொருத்தமற்றது (2) சரியானது (3) கூறமுடியாது

34. ஒரு பாடசாலையில் 910 மாணவர்கள் கல்வி கற்றனர். இவர்களில் 3/7 பங்கினரும் 11பேரும் பெண்கள், ஆண்கள் எத்தனை பேர்?
.....

விவரணத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

ஒரு மகப்பேற்று மருத்துவ மனையில் 6 மாதத்திற்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு தேக்கரண்டியும், ஒரு வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு மேசைக் கரண்டி மருந்தும் கொடுக்கப்பட்டன. 62 பிள்ளைகள் 6மாதத்துக்குட்பட்டவர்கள். 87 பிள்ளைகள் ஒரு வயதுக்குட்பட்டவர்கள்.

35. 6மாதத்துக்குட்பட்ட குழந்தைகளுக்கு எத்தனை M.L மருந்து கொடுக்கப்பட்டது?
.....
36. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எத்தனை M.L மருந்து கொடுக்கப்பட்டது?
.....
37. இரு பகுதியினருக்கும் வழங்கப்பட்ட மருந்தினை L, M.L இல் தருக?
.....

அன்பான அப்பா, அம்மா அறிவது உங்களது பேரன் இப்பொழுது நடக்க ஆரம்பிக்கின்றான். தம்பி ஆவணி மாதம் சோதனை எடுக்கிறான். கௌரியின் சோதனை மறுமொழி வந்துள்ளது. 9A யும் ஒரு C யும் எடுத்துள்ளார் .

அன்பான
கோமதி

சரியான விடையின் கீழ் கோடிடுக

38. இக் கடிதத்தை எழுதியவர்
மகள் / மகன் / மருமகள்
39. தம்பி எடுக்கும் சோதனை
க.பொ.த. உயர்தரம் / க.பொ.த. சாதாரணம் / எழுதுவினைஞர் பரீட்சை
40. கௌரி எடுத்த பரீட்சை
தரம் 5 புலமைப் பரிசில் / க.பொ.த.சாதாரணம் / க.பொ.த உயர்தரம்

குறிப்பு:-
கடந்த புலமைப்பரிசில் பரீட்சை வினாக்களுக்குரிய விடைகளும், அதிகூடிய புள்ளிகளை பெற்ற மாணவர்களின் பெயர்விபரமும் நாளைய வலம்புரியில் வெளிவரும் .

ஆ-ர்

இன்று ஒரு தகவல்

திருடன்சன்னியாசிஆனான்

ஒரு நாள் ஒரு திருடன் அரசனுடைய அரண்மனையில் திருடுவதற்காக நுழைந்தான். அப்பொழுது இரவின் நடு ஜாமப்பகுதி கழிந்து கொண்டிருந்தது அரசன் தன் மனைவியிடம் 'நம் மகளை ஆற்றங்கரையில் வசித்துக் கொண்டிருக்கும் சாதுக்களில் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுக்கப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான். அரசன் சொன்ன வார்த்தைகள் மறைந்திருந்த திருடனின் காதில் விழுந்தன. உடனே அவன், 'ஆகா, பேஷ்! இப்போது ஒரு நல்ல அதிர்ஷ்டம் எனக்காகக் காத்திருக்கிறது. நாளைக்கே நான் சாதுவேஷம் போட்டுக் கொண்டு ஆற்றங்கரையிலுள்ள சாதுக்களில் ஒருவனாகப் போய் உட்கார்ந்து கொள்கிறேன். ஒரு வேளை எனக்கே யோகம் அடித்து இளவரசியே எனக்கு மனைவியானாலும் ஆகலாம். என்று நினைத்து அரண்மனையை விட்டு வெளியேறினான்.

மறுநாள் காலையில் திருடன் தான் திட்டமிட்டபடியே சன்னியாசிக் கோலத்தில் சாதுக்களில் ஒருவனாகப் போய் உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரம் கடந்தது. அரண்மனையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். அங்கே இருந்த சன்னியாசிஒவ்வொருவரிடமும் மன்னரின் மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்களுடையகோரிக்கையை அந்தச் சாதுக்களில் ஒருவருமே ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அரசனுடைய அதிகாரிகள் எவ்வளவோ மன்றாடினார்கள். கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். பிரார்த்தித்தார்கள். என்றாலும் சாதுக்களில் ஒருவருமே சம்மதிக்கவில்லை அனைவருமே மறுத்து விட்டார்கள்.

தங்களுடையகோரிக்கையை சாதுக்கள் ஏகமனதாக முற்றிலும் நிராகரித்தவுடன், கடைசியில் அதிகாரிகள் சாது வேஷம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த திருடனிடம் வந்தார்கள். அவனிடமும் தங்களுடைய கோரிக்கையை எடுத்துச் சொல்லிப் பார்த்தார்கள். திருடன் பதில் பேசவில்லை. மௌனமாக உட்கார்ந்திருந்தான். அதிகாரிகள் அரண்மனைக்குத் திரும்பி, 'ஒரு வாலிப சன்னியாசி அங்கேஇருக்கிறார். ஒரு வேளை அவர் நமதுகருத்துக்கு இணங்குவார் போலிருக்கிறது. அங்குள்ள மற்றச் சாதுக்கள் அனைவருமே நம் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள்' என்று அரசனிடம் செய்தியைத் தெரிவித்தார்கள்.

பிறகு அரசனே கபட சன்னியாசியிடம் நேரில் சென்றான். தன்மகளை ஏற்று அங்கீகரிக்க வேண்டும்; திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று மனப்பூர்வமாகவும் பணிவாகவும் அந்தக் கபட சன்னியாசியிடம் வேண்டினான்; பிரார்த்தித்தான். அரசனே நேரில் வந்ததையும், தன் முன்னால் பணிந்து நின்று உள்ளம் தோய்ந்து வேண்டியதையும் கண்டதும் திருடனின் மனம் மாறிவிட்டது. 'ஆகா! நான் சாது அல்ல. சாதுவின் உடையைமட்டுமே அணிந்துகொண்டிருக்கிறேன். அது காரணமாக அரசனே என்னைத்தேடி நேரில் வந்திருக்கிறான். என் முன்னால் பணிந்து நின்று வேண்டுகோள் விடுக்கிறான். நயந்து பிரார்த்திக்கிறான். நான் உண்மையிலேயே சாதுவாகி விட்டால் இதைவிடவும் உயர்ந்தவை எனக்கு எவ்வளவோ காத்திருக்கும் அல்லவா?' என்ற சிந்தனைகள் திருடனின் உள்ளத்தில் உதயமாயின.

அந்தச் சிந்தனைகள் அவனது உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து அவனுடைய மனப்போக்கையே முற்றிலும் மாற்றி அமைத்து விட்டன. போலிவேடம்பூண்டு மன்னன் மகளைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அந்த நிமிடமே அவனது உள்ளத்தை விட்டு அகன்றது. அந்தநாள் முதற்கொண்டு தன் பழைய வாழ்க்கை முறைகளை அடியோடு நீக்கவும் உண்மையான சாதுவின் உயர்ந்த வாழ்க்கை வாழவும் அவன் கடுமையாக முயற்சி செய்தான். பிறகு அவன் திருமணமே செய்து கொள்ளவில்லை. அவனுடைய உண்மையான முயற்சி நல்ல பலனை விளைவித்தது. பிற்கால வாழ்க்கையில் அவன் அக்காலத்தில் விளங்கிய உயர்ந்த தபஸ்விகளில் ஒருவன் ஆனான். மகானின் நிலையை அடைந்த அவனை உலகமே பாராட்டித் தலை வணங்கியது. போலிவேடம் சில சமயங்களில் எதிர்பாராத நன்மையைத் தருகிறது. ●

நன்றி
ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

யுத்தத்தால் சேதமான கிணறுகளை திருத்தியமைக்க 5 ஆயிரம் உதவி

யாழ். வந்த நீர்ப்பாசன அமைச்சர் உறுதி

(தென்மராட்சி)

தென்மராட்சி, வலிகாமம் வடக்கு, கொழும்புத்துறை, மற்றும்அரியாலைப்பகுதிகளில் யுத்தத்தின் போது சேதமடைந்த குடிநீர்க்கிணறுகளைத் திருத்தம் செய்வதற்கு நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சு தலா 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

அண்மையில் யாழ். அரச செயலகத்தில் அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம் சம்பந்தமான கலந்துரையாடலின்போது நீர்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் அங்கு கருத்துத்தெரிவிக்கையில்:

கடந்த இருதசாப்தங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது தென்மராட்சி வலிகாமம் வடக்கு, கொழும்புத்துறை மற்றும்அரியாலைப் பகுதியில் உள்ள பல குடிநீர் கிணறுகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால், அப்பகுதி மக்கள் குடிநீரைப்பெறுவதற்கு மிகவும்கஷ்டப்படுகின்றனர். எனவே அத்தகையகுடிநீர் கிணறுகளைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சு 10 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கையின் நியாயத்தன்மையைப்புரிந்துகொண்ட அமைச்சர், ஒவ்வொரு கிணறுகளையும் திருத்துவதற்கு 5 ஆயிரம் ரூபா வழங்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்தார்.

மேலும் இக்கலந்துரையாடலின் போது நீர்பாசன அமைச்சர் எல்.பி. நெல்சன், நீர் முகாமைத்துவ அமைச்சர்லஷ்மன் செனவிரத்ன, இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அ. விநாயகமூர்த்தி எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர்.

யாழ் குடாநாட்டில் நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு வசதியாக அமைச்சரினால் ஒரு உயர் மட்ட செயலணிக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

இதேவேளை, நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சின் மகளிர் குழுவின் பிரதிநிதி, யுத்தத்தினால் சேமடைந்த 20 கிணறுகளைப் புனரமைப்புச் செய்வதற்கென தமது அமைப்பினால் ஒருலட்சம் ரூபாவை வழங்குவதாக கலந்துரையாடலில் உறுதியளித்தார். (இ-77)

கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் இடம் பெறவுள்ளது. (உ-246)

கணிதபாட செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் தரம் 3, 4 இல் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த வகையில் நெடுந்தீவு கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை வரை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் (நிலையம் - 1) நடைபெறவுள்ளது.

வேலணை, ஊர்காவற்றுறை கோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள், ஊர்காவற்றுறை (நிலையம் - 2) கோட்டக் கல்வி அலுவலக மண்டபத்தில் எதிர்வரும் 29, 30, 2, 3, 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-19)

பட்டம் வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் மாபெரும் புத்தாண்டு விழாவும், சமூக சேவையாளர், மாணவர்கள் கௌரவிப்பும், கடந்தஞாயிற்றுக்கிழமை சங்கத்தின் தலைவர் நா. தனேந்திரம் தலைமையில் நடை பெற்றது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, நா.வன்னியசிங்கம் (அதிபர்), ஆர். திருஞானசம்பந்தர் (ஓதுவார்), டாக்டர் வை. தியாகராஜா, டாக்டர்திருமதி அனுஷம்மா, பொ. நடராசா (இளைப்பாறிய அதிபர்) சைவப்புலவர் வ.கந்தசாமி, டாக்டர் க. நவரட்ணம், வர்த்தகர் க.வரதநாதன், திருமதி ம. மங்கையற்கரசி (நடன ஆசிரியை) தனபாலன் (இந்து சமயப்பேரவை) ஆகியோரே சமூகத் திலகம் என்னும் பட்டம்வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர். (உ)

அன்னை பூபதியின் 14 ஆவது ஆண்டு இறுதி நாள் இன்று

(மட்டக்களப்பு)

அன்னை பூபதியின் 14ஆம் ஆண்டு இறுதி நாள் வைபவம் இன்று மட்டக்களப்பு நாவலடி அன்னை பூபதி துயிலும் இல்லத்திற்கு அருகிலுள்ள திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வையொட்டி கல்லடிப் பகுதியிலிருந்து புறப்படும் பேரணி அன்னை பூபதி துயிலும் இல்லம் வரை சென்றடையும், இதனை தொடர்ந்து அன்னை பூபதி நினைவாக நாவலடி இளைஞர் கழகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கிஷோ, துணை அரசியல் பொறுப்பாளர் சுரேன் மற்றும் மூத்த உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (உ-9)

தமிழக முதல்வர் ஜெயாவின் தீர்மானத்திற்கு பொங்கு தமிழில் கண்டனம்

(ஈச்சமோட்டை)

கடந்த புதன்கிழமை யாழ். மருத்துவ பீடமைதானத்தில் மாலை இடம்பெற்ற மாபெரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் தமிழ்மக்கள் சார்பாக செல்வி ஜெயலலிதாவின் சட்டசபைத் தீர் மானத்துக்கு மாபெரும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் இந்தியாவின் தமிழக சட்டப் பேரவை செல்வி ஜெயலலிதாவினால் நிறைவேற்றப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின்தலைவர் வே. பிரபாகரனை மத்திய அரசு உடன்கைது செய்து நீதி மன்றில் நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கே கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (உ-59)

வடமராட்சி கிழக்கு பாடசாலைகள் இயங்கும்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை மகா வித்தியாலயம் ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயம் செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை ஆகியன அடுத்த தவணை முதல் உரிய இடத்தில் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-42)

சிந்தனைக்கு விருந்து

இறையாண்மை கிட்ட வழிசெய்வோர் வருக!

கனகால மாக இனவாத மென்றே
கறையே படிந்த அதனால்
தனதாவி சோர மிகுவாதை கொண்டு
தளைபட் டிருந்த நிலைபோய்
இனியேனு மிந்த நிலமீதில் எங்கள்
இறையாண்மை கிட்டும் எனவே
மனசார நம்பி வழிசெய்கு வோரை
வரவேற்க எண்ணல் தவறோ?

- பழையவன்

களுத்துறை கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கடந்த ஒருவார காலமாக களுத்துறைக் கைதிகள் மேற்கொண்டு வந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

3 மாதகாலத்தினுள் களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென பிரதி சொலிசிற்ற ஜெனரல் றியன்சி அரசகுலரத்தின நேற்றுமுன்தினம் சிறைச்சாலைக்குச் சென்று உறுதியளித்ததையடுத்தே உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாகக்கைவிடப்பட்டுள்ளது.

வழக்குகள் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், நீண்டகாலமாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையிலும் உள்ள கைதிகளினது விசாரணைகள் துரிதப்படுத்தப்படுமென்றும் சொலிசிற்ற ஜெனரல் உறுதி வழங்கியுள்ளார்.

களுத்துறைச் சிறைச்சாலைக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டார்டர் ஜயலத் ஜயவர்த்தனா மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் சாரா விஜயதிலக ஆகியோர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

மூடப்பட்ட பாடசாலைகளை மீளத் திறக்குமாறு ஆசிரியர் சமூகம்கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்குமாகாணத்தில் யுத்தத்தின் காரணமாக மூடப்பட்ட சகல பாடசாலைகளையும் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சைக் கோரியுள்ளது.

வடக்கு-கிழக்கில்160 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. இவற்றில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 30 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இத்தகையநடவடிக்கையின் விளைவாகவே ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாதுள்ளதாகவும்தமிழர் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-9)

வெற்றியைத் தவிர வேறேதும் எமக்கில்லை என்ற மக்கள் மனவெழுச்சியின் வெளிப்பாடே பொங்குதமிழ்

தமிழர் தாயகத்தைவலியுறுத்தி,யாழ். பல்கலைக்கழகமாணவர்களின்ஏற்பாட்டில்நேற்று முன்தினம் மருத்துவ பீடமைதானத்தில்இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில்அலைகடலென திரண்டிருந்த மக்கள் மத்தியில், பிரமுகர்கள் பலரும் ஆற்றிய எழுச்சிமிகு உரைகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

மகளிர் பிரிவு அரசியல் பொறுப்பாளர் தமிழினி

(யாழ்ப்பாணம்)

முகவரியே இல்லாது வாழ்ந்த தமிழர்கள் இன்று முகங்களை நிமிர்த்தி எங்கள் விடியலை நோக்கிப் போராடத் துணிந்து விட்டனர்.

வெற்றியைத் தவிர வேறேதும் எமக்கில்லை என்ற மக்கள் மனவெழுச்சியை இன்றைய பொங்கு தமிழ் நிகழ்வு எடுத்துக் காட்டி நிற்கிறது.

எங்களுடைய மக்கள் இன்று வீறு கொண்டு எழுந்து நிற்கின்ற எழுச்சிக்கு வித்திட கொடுத்த விலைகள் கொஞ்ச நஞ்சமல்ல 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரச் செல்வங்களின் குருதியை மண்ணுக்கு உரமாக்கி இந்த வெற்றியைப்பெற்றுள்ளோம்.

உங்கள் தலைகள் நிமிர வேண்டும் என்பதற்காக தங்கள் தலையை விலையாகக் கொடுத்தவர்கள் இந்த மாவீரர்கள்.

அன்பான மக்களே நாங்கள் உங்களைப்பிரிந்திருக்கிறோம் ஆனாலும்உங்களுக்குள் நாங்கள் இருந்திருக்கிறோம்.

நீங்களும் எங்களைப் பிரிந்திருந்தீர்கள் ஆனால்எங்களுக்குள் நீங்கள் இருந்தீர்கள்.

மக்களையும் எங்களையும் யாராலும் பிரிக்க முடியாது என்பதை உலகிற்கு நீங்கள் உணர்த்தியுள்ளீர்கள்.

நாங்கள் நீந்திக்கடப்பது நெருப்பாறு என்பது தெரிந்திருந்தும் மக்கள் கவசம் எங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை உண்டு இந்த மக்கள் கவசம் இருக்கும் வரை இந்த விடியலின் பாதையில் நிச்சயம் வீறுநடை போடுவோம்.

துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

(யாழ். பல்கலைக் கழகம்)

அடக்கி ஒடுக்கப்பட்டதமிழ் இனம் வீறு கொண்டெழுந்து இன்று சர்வதேசத்தையே வியக்கவைக்கும் அளவுக்கு சுதந்திர இனவிடுதலைப் போராட்டமாக வளர்ந்துள்ளது.

கடந்த வருடம் பல்வேறு கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும்மத்தியில்எமது பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பொங்கு தமிழ்எழுச்சி நிகழ்வு இன்று நாடு பூராகவும் வியாபித்து எழுச்சி கொண்டு நிற்கிறது.

பலவருடங்களாக மக்களின் மனங்களினுள் சிறைப்படுத்தப்பட்ட உணர்வுகள் இன்று பொங்கு தமிழாக பிரவாகம் கொண்டு நிற்கிறது.

பொங்குதமிழ் நிகழ்வின் மூலம் நாம் தேசிய இனம்என்பதனையும் தனித்துவமான கலைகலாசார விழுமியங்களையும் கொண்டவர்கள் என்பதனையும் சர்வதேசத்திற்கு உணர்த்தியுள்ளோம்.

எஸ். கௌரிதாஸ்

(கிழக்கு. பல்கலைக்கழக மாணவமன்றதலைவர்)

தமிழர்களின் தாயகமான வடகிழக்கை அதாவது பொத்துவில்தொடக்கம் பொலிகண்டிவரைக்கும்எவராலும்பிரிக்க முடியாது. இச்செய்தியையே நாம் இங்கு விசேடமாக கொண்டுவந்துள்ளோம். நாம் வரும் பாதையெல்லாம் கிளிநொச்சி முதல் ஆனையிறவு வரை புலிகள்குவித்த வெற்றிகளைக்கண்டு வந்தோம்.

கெரில்லா, மரபுவழி யுத்தத்தில் மட்டுமல்ல அரசியலிலும புலிகள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எமக்கு நீதியான நிரந்தரமான சமாதானம் வேண்டும் அதற்காக நாமனைவரும் அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும்.

மௌலவி ஜாபீன்

(பெரியகடை ஜும்மா பள்ளிவாசல்)

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியேறுமாறு அழைத்ததையிட்டு முஸ்லிம் மக்கள் சார்பில் பிரபாகரன் அவர்களுக்கு நான் நன்றிதெரிவிக்கினறேன்.

நாமும் தமிழ்பேசும் மக்களே. 12, ஆண்டுகளுக்குப் பின் நாம் யாழ்ப்பாணம் வந்திருப்பதிலும் 'பொங்கு தமிழ்' எழுச்சியில் கலந்து கொள்வதிலும் பெரும் மகிழ்வடைகின்றோம்.

இன்று நடைபெறும் சமாதான முயற்சிகள் வெற்றி அளிக்கவேண்டும் அதன்மூலம் எல்லாமக்களும் சமாதானமாக வாழவேண்டும்.

துணைவேந்தர் மூக்கையா

(கிழக்கு பல்கலைக்கழகம்)

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா எமது தேசியத் தலைவர் பிரபாகரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதன் மூலம் தமிழினம் தனித் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் எமது இனத்திற்கு சமாதானம், சுபீட்சம், அமைதி ஏற்பட வழி கோலப்பட்டிருக்கின்றது.

நாம் எமது அபிலாசைகளை உலகத்தின் காதுகளில் உரக்க கூறுவதன் மூலம் எமது உரிமைகளை பெறுவதற்கான ஒன்றுபட்ட செயற்பாடுகளை மேறகொள்ளவேண்டும்.

(உ-10-59-6-19)

மாவை சேனாதிராஜா

(யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

தமிழ் இனம் ஒரு தேசிய இனமாகும். உலகின் சுயாதீன இனம் ஒன்றுக்கு உள்ள அத்தனை தகைமைகளும் எமது இனத்திற்கு உண்டு. எம்மை நாமே ஆளும் சுதந்திரம் எமக்கு வேண்டும்.

தமிழர்களாகிய நாம் ஒன்றுபடுவது காலத்தின் தேவையாகும். அதன் ஓர் கட்டமாகவே நான்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு கூட்டமைத்துள்ளன.

தந்தை செல்வாவின் விருப்பம் இன்று நிறைவேறியுள்ளது.

அவர்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு சம அந்தஸ்தையுடைய தீர்வைத் தான் விரும்புகின்றார்கள். இதன் வெளிப்பாடேபொங்கு தமிழ் நிகழ்வு.

இந்த பொங்குதமிழ் நிகழ்வைக்கண்டு சிங்கள சகோதரர்கள் அச்சப்படத் தேவையில்லை.

எமது இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் ஒரு மைல்கல் இது.

எனவே, எமது எழுச்சி சிங்கள மக்களுடைய தேசியத் தன்மையை எக்காரணம் கொண்டும் பாதிக்க மாட்டாது.

கலாராஜ்

(யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர்)

எமது தாயகத்தில் இராணுவம் நிலை கொண்டிருப்பதை நாம் விரும்பவில்லை. நிரந்தர சமாதானம் மலர வேண்டுமாயின் இராணுவம் எமது தாயகத்தை விட்டு முற்றாக விலக வேண்டும்.

பேரினவாத அரசாங்கம் பலகளாலும் கூலிக் குழுக்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தமிழ் மக்களை பொங்கி எழவைத்த பெருமை யாழ் பல்கலைக் கழக சமூகத்தையே சாரும்.

நாம் அடைய வேண்டிய இலக்குகள் இன்னும் இருக்கின்றன. அதுவரை நாம் நிதானமாக செயற்பட வேண்டும் நாம் சிங்களவர்களை நேசிக்கிறோம் சமாதானத்துக்காக அவர்களுடன் கைகோர்க்கத் தயாரரக உள்ளோம். சிங்கள இராணுவத்தினரது கஷ்டங்கள் துன்பங்களையும்உணருவோம். இவற்றுக்கு நல்ல தீர்வுவர சமாதானமே அவசியம்.

இந்த சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முயலும் சக்திகளையும் நாம் இனங்கண்டு எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

பரமநாதன்

(மனித நேயப் பிரதிநிதி)

நாம் அரசாங்கத்திடம் சலுகைகளைக்கேட்கவில்லை. பறிக்கப்பட்ட எமது உரிமைகளையே கேட்டு நிற்கின்றோம்.

இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தக்கை சாத்திடலின் மூலம் அரசியலில் நிரந்தர எதிரியோ நண்பனோ இருக்க முடியாது என்பது தெளிவாகிறது.

சிங்கள தேசிய தலைவராக ரணில் விக்கிரம சிங்காவும் தமிழ் தேசிய தலைவராக தலைவர் பிரபாகரனும் கைச்சாத்திட்டுள்ள இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் எமது சமாதானப் பாதை தெளிவாகியுள்ளது.

'பாற்காவடி' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் சு. வேலுப்பிள்ளை (சு.வே) எழுதிய பாற்காவடி சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கலாநிதி க. சொக்கலிங்கம் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

சி.சிவசரவணபவன்(சிற்பி) திருமதி கோகிலா மகேந்திரன், யாழ்பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் ஈ. குமரன் ஆகியோர் மதிப்புரைகளை ஆற்றவுள்ளனர். (எ)

போதைப் பொருள் கடத்திய நபர் கைது

(கண்டி)

கண்டி ஊழல் தடுப்புப் பிரிவுபொலிஸார் 180 பொதிகளில் ஹெரோயின் போதை பொருள்களை வைத்திருந்த நபர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கண்டியிலிருந்து கொழும்புக்கு பஸ்வண்டியில் பிரயாணம் மேற்கொண்டிருந்த போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(உ-8)

பஸ்விபத்தில் 101 பேர்காயம்

(கொழும்பு)

பதுளைபசறைவீதியில் பஸ்வண்டி ஒன்று நேற்றுமுன்தினம் பாதையை விட்டுவிலகி பள்ளத் தாக்கில் பாய்ந்ததில் அதில்பயணம் செய்த 101 பேர்காயமடைந்துள்ளனர்.

(உ-6)

மாதாந்த குழுக்கூட்டம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுடற்றொழில் சங்கங்களிற்கான மாதாந்த குழுக்கூட்டம் எதிர் வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர்பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(செ-246)

பொதுஜன ஐக்கிய முன்னணியின்

பாராளுமன்றக் குழு இன்று ஜனாதிபதி தலைமையில் கூடுகிறது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக்குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் இன்று கூடவிருக்கிறது.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு எடுக்கும் முயற்சிகளினை தடுக்கும் நோக்குடனேயே ஜனாதிபதி இக்கூட்டத்தினை கூட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினை நலிவடையச் செய்யும் நோக்குடனேயே ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசு சதி செய்து வருகிறது என பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் குற்றம் சாட்டிவருவதும்குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் நோக்குடன் அமைக்கப்படுவது தேசிய திட்டமே தவிர தேசிய அரசாங்கமன்று தேசிய அரசாங்கம் என்ற பொதுச்சதியிலேயே இத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்பொ.

இலங்கையின் வெற்றிகளுக்கு

வழி வகுத்த முரளியின் தோள்பட்டைஎலும்புமுறிவு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் வலது கையென திகழ்பவரும், இடதுகைப் பந்து வீச்சாளருமான முத்தையா முரளிதரன் தோள்பட்டை எலும்பு முறிவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சார்ஜா கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் விளையாடிக்கொண்டிருந்த சமயம் களத்தடுப்பின் போது இவரது தோள்பட்டையில் முறிவு ஏற்பட்டதாகவும்,

முரளி குணமடைய மூன்று மாத காலம் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

ஐ. முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம்.ஜெயரத்னா தெரிவித்துள்ளார்.

மேற் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

" இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி"..... (லூக்கா 2: 10)

இயேசுவே ஆண்டவர்! உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்! இயேசு விடுவிக்கிறார்!

தரிசனம் இலங்கை - 2002 Vision Sri Lanka - 2002

வல்லமைப் பெருவிழா Power Festival

Rev. Mark Moore (U.S.A)

சங்கை மார்க் மூர்

சுவிஷேசக் கூட்டமும் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும்.....
இனிய புதிய பாடல்கள்!
விண்ணை முட்டும் ஆராதனை!!
அனல் மூட்டும் தேவசெய்தி!!!
யாவும் இலவசம்!! யாவரும் திரண்டு வாரீர .....

19வருடங்களாக 25 நாடுகளில் சுவிஷேசம் அறிவித்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஜெபித்து சுகம் பெற்றுக்கொடுத்த அற்புத ஊழியர், அனைவருடைய தேவைகளுக்காகவும் அன்னார் அன்புடன் பிரார்த்தனை செய்வார்



இன்னிசை முரசு!

சகோ. *சீர்காழி இயேசுப்பிரகாசம்*

இந்தியாவின் தலை சிறந்த சுவிஷேசப் பாடகர். உலகின் பல பாகங்களிலும் வருடா வருடம் இயேசுவின் இனிய பாடல்களை பாடி வருகிறார். 500க்கும் மேலான பாடல்களை இயற்றி 53 ஒலி நாடாக்களை வெளியிட்டவர். காலையிலும், மாலையிலும் தேவ பாடல்களை பாடி ஆண்டவரை மகிமை படுத்துவார்.

19, 20, 21
யாழ்ப்பாணம்
துரையப்பா
விளையாட்டு அரங்கில்

சங்கை

அல்பேட் ஜெபநாயகம்

Rev, ANTONY JOSEPH
(Swiss)

15 வருடங்களாக சுவிஸ்லாந்து தேசத்தில் தமிழ் ஜனங்கள் மத்தியில் சுவிஷேசம் அறிவித்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஊழியம் செய்து ஜெபித்து சமாதானம், சுகம் பெற்றுக் கொடுத்த தேவ ஊழியர் காலையில் ஊழியர்கள் கருத்தரங்கிலும் மாலையில் சுவிஷேசக் கூட்டத்திலும் தேவ நல்வார்த்தை அளிப்பார்.

குறிப்பு:- 19,20,21 ஆம் திகதிகளில் எல்லா இடங்களுக்குமான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

காலைக்கூட்ட ஒழுங்குகள

19, 20, 21, ஏப்ரல் 2002 யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00மணிக்கு ஊழியர்கள், முன்னேறும் விசுவாசிகளுக்கான கருத்தரங்கு

வல்லமைப் பெரு விழா

இறுதி மூன்று நாட்கள்

கோப்பாயிலும் வட்டுக்கோட்டையிலும் நடந்த விழாவிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள், அநேக குருடர், செவிடர் மற்றும் ஊனமுற்றோர் தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

2002 சித்திரை மாதத்தில்

தினமும் மாலை 4மணிக்கு

வியாதியா! பில்லி சூனிய பிரச்சினையா!
வியாபாரத்தில் நஷ்டமா!
குடும்பத்தில் குழப்பமா!
சமாதானம் இல்லையா!
சந்தோஷம் இல்லையா!
வாருங்கள் விடுதலை பெறுங்கள்!

Organized By:

Tamil Christian Fellowship (Switzerland) & Canaan Fellowship International (Sri Lanka)

தொடர்புகளுக்கு

கானான் ஜெப ஆலயம்

இருபாலை, கோப்பாய் 021- 3653

Sound System:- *Mr. T.Mahalingam, Maga Mini sounds, kokuvil*

பின்லேடனை தேடி அமெரிக்கா மத்திய கிழக்கிலும் வலை விரிப்பு

(ஜெருசலேம்)

அமெரிக்காவால் சர்வதேச தீவிரவாதி என கருதப்பட்டு வரும் ஒஸாமாபின்லேடனை மத்திய கிழக்குப் பகுதியில் தேடுவதற்கான விசேட குழுவை அமெரிக்கா தயார்ப் படுத்தி வருகிறது.

கடந்த செப்ரெம்பர்மாதம் இடம்பெற்ற தாக்குதலின் பின், பின்லேடன் மறைந்துள்ள இடத்தை இதுவரை கண்டு பிடிக்காத அமெரிக்கா தற்பொழுது மத்திய கிழக்குப் பகுதியில் ஒஸாமாவைத்தேடி வலையை வீசியுள்ளது.

இதற்கிடையில்பின்லேடன் அமெரிக்கத் தீவுகளில் ஒன்றில் மறைந்து வாழுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களில் எதுவித உண்மையும் இல்லை என தெரிவித்த அமெரிக்கா, தனது நாட்டிலும் தேடுதல்களை தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-7)

வீழ்ந்து நொருங்கிய சீன விமானத்தில் விமானி உயிருடன் மீட்பு

(பீக்கிங்)

165 பேருடன் தென்கொரியாவில் விழுந்து நொருங்கிய விமானத்தில் உயிருடன் மீட்கப்படவர்களும் விமானியும் ஒருவர் என தெரியவந்துள்ளது.

விமானம் வீழ்ந்து நொருங்குவதற்கு சம்பந்தப்பட்ட விமானியே காரணம் கூறமுடியும் என்பதனாலும் விமானி பலியாகி விட்டார் என்று கருதியதாலும் உண்மையை அறியமுடியாத நிலையில் விபத்துக் குறித்த விசாரணைகள் கைவிடப்பட்டன.

இந்த நிலையில் விமானி உயிருடன் இருக்கிறார் என்ற செய்தி சம்பந்தப்பட்ட தரப்பில் வியப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை விபத்து தொடர்பாக விமானி தெரிவிக்கையில் விபத்து நடைபெறுமளவிற்கு விமானத்தில் ஏந்தவித கோளாறும் இல்லை என்றும் விபத்துக் குறித்து தன்னால் ஊகிக்க முடியாதுள்ளதாகவும் கூறியுள்ளார்.

கடந்த வாரம் இதே விமானத்தை இதே விமானநிலைத்தில் தரையிறக்கியதாகவும் சுமார் 5 தடவைகளுக்கு மேல் தான் சாதரரண்மாகத் இவ் விமானத்தை தரையிறக்கியதாகவும் தெரிவித்துள்ளார். (உ-7)

மழை பெய்வதற்காக கழுதைகளுக்கு திருமணம்

(சென்னை)

ஐந்தாறுமாதங்களாக மழை பெய்யவில்லை என்பதற்காக இரண்டு கழுதைகளுக்கு திருமணம் செய்து வைத்த விசித்திர சம்பவம் தமிழ்நாடு நாமக்கல்லில் இடம்பெற்றுள்ளது.

இக்கிராமத்து மக்கள் மழை பெய்யாது விட்டால் இரண்டு கழுதைகளுக்கு திருமணம் செய்து வைத்தால் மழை பெய்யும் என்னும் நம்பிக்கையை நீண்ட காலமாகவே கொண்டுள்ளனர்.

அந்நம்பிக்கையின் அடிப்படையிலேயே யோகராஜன் யோகராணிஎன்ற இருகழுதைகளுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளனர்.

ஆனால் திருமணம் முடிந்தும் மழை பெய்ததாகத் தெரியவில்லை. (செ)

ஜெனிம் அகதி முகாமில் மோசமான நிலைமை

செ. ச. அதிகாரி தெரிவிப்பு

(ஜெருசலேம்)

ஜெனிம் அகதிகள் முகாமில் அதிர்ச்சியுற வைக்கும் படு மோசமான நிலைமைகள் காணப்படுவதாக, அங்கு நேரில் சென்று பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனிய மேற்குக் கரையில் மோதல்கள் ஆரம்பித்து இரண்டு வாரங்கள் கடந்த பின்னரே, அந்நாட்டிற்குள் முதன்முறையாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அந்த அகதிகள் முகாமில் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் சகிக்க முடியாதளவு துர்நாற்றம் வீசுவதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் படையினரின் துணையுடன் ஜெனிம் நகருக்குள் சென்ற செஞ்சிலுவைச் சங்கமும், செம்பிறைச் சங்கமும் அங்கு போர்நடவடிக்கைகளில்காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கவும், சடலங்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். (செ)

ஏரியல்ஷரோன்-பவல் அடுத்த கட்ட பேச்சு வியரம் வெளியாகவில்லை

(ஜெருசலேம்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல், இஸ்ரேலின் பிரதமர் ஏரியல் ஷரோனுடன் இரண்டாவது சுற்றுப்பேச்சுக்களை அண்மையில் ஆரம்பித்துள்ளார்.

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக அமெரிக்கவெளியுறவு அமைச்சர் கொலின் பவல், பலஸ்தீன–இஸ்ரேல் தரப்புகளுடன் பேச்சு நடத்தி வரும் அதே வேளை பலஸ்தீனப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இஸ்ரேலியரை வெளியேறுமாறும் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இதே வேளை, இருதரப்பு பேச்சுக்களிலும் தான் முன்னேற்றம்கண்டுள்ளதாக பவல் தெரிவித்த போதிலும் இறுதியாக இடம் பெற்ற பேச்சுகளில் பேசப் பட்டவிடயங்கள் இதுவரை வெளியாக வில்லை.

ஒருவாரகாலத்திற்குள்பலஸ்தீனப் பகுதிகளுக்குள் நிலை கொண்டுள்ளஇஸ்ரேலியர்கள் வெளி யேறுவார்கள் என ஏரியல் ஷரோன் உறுதி மொழியளித்த போதிலும் பலஸ்தீன பெத்லகேம் பகுதியில் உள்ள இஸ்ரேலியர்கள் வெளியேறுவது இழுபறி நிலையில் காணப் படுவதாகவும் தெரிவித்தார். (உ-7)

வங்கிஊழியர் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியாவின் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளை எதிர்த்து ஒரு கோடி வங்கி ஊழியர்கள் அண்மையில் பொது வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் 27 அரச துறை வங்கி ஊழியர்களும் வெளிநாட்டு வங்கிகளில் கடமை புரியும் ஊழியர்களும் பங்குகொண்டனர்.

இவ்வேலை நிறுத்தம் காரணமாக இந்தியாவுக்கு மூன்று கோடி ரூபா வரையிலான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

பஸ் பள்ளத்தில் பாய்ந்தது

(கொழும்பு)

கொழும்பிலிருந்துநுவரெலியாவுக்குச் சென்ற பஸ் ஒன்று ஹக்கல பகுதியில் 200 அடி பள்ளத்தில் பாய்ந்ததில்அதில் பயணம் செய்த ஒருவர் உயிர் இழந்ததுடன் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட தாகவும் தெரிக்கப்படுகிறது.

சுற்றுப் பயணம் சென்றவர்களே இப்பஸ்ஸில் பயணம் செய்ததாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். (உ-9)

ஆச்சேஸ் விழா

(யாழ்ப்பாணம்)

மரியாயின் சேனையால்வருடந்தோறும் நடத்தப்படும் ஆச்சேஸ் விழா எதிர்வரும்21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிதொடக்கம் பி.ப.2-00மணிவரை யாழ். புனித- மரியாள்பேராலயத்தில் (பெரிய கோவில்) நடைபெறவுள்ளது. தியான வழிபாடுமரியாயின்சொரூபம் முன்பாக வணக்கம் செலுத்துதல் ஆத்மீக இயக்குநர்களின் மறை உரைகள் ஆகியன அன்றையதினம் இடம்பெறவுள்ளன. (உ)

புதைத்த நகைகளை மீட்க படையினர் உதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த 11ஆம் திகதி எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் அப் பகுதிக் கோயில் குருக்கள் ஒருவர் இடப்பெயர்வின்போது புதைத்துவிட்டுச்சென்ற தங்க நகைகளை படையினர் மீட்டுக் கொடுத்துள்ளனர் மேற்படி பகுதியில் உள்ள கோயில் ஒன்றில் தாம் புதைத்து விட்டு சென்ற நகைகளை மீட்கஉதவும்படி கே.சரவணமுத்து என்ற குருக்கள் படைத்தரப்பினரை நாடியபோது 552வது படையணியின் வழிகாட்டலுடன் மீட்டுக் கொடுத்ததாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது (உ)

தமிழக நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்காது 11 இலட்சம் வழக்குகள்

(புதுடில்லி)

தமிழக நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்கப்படாத நிலையில் 11 லட்சம் வழக்குகள் உள்ளதாக மாநில சட்ட அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலுள்ள நீதிமன்றங்களில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்து11ஆயிரம் வழக்குகள் புதிதாக தாக்கல் செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

அமெரிக்கா அழுத்தம் இரு நகர்களில் இருந்து இஸ்ரேலியர்வெளியேறுவர்

(ஜெருசலேம்)

அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில்இரு பலஸ்தீனநகரங்களிலிருந்து இஸ்ரேலியர்களை வாபஸ் பெறுவதற்கு ஏரியல்ஷரோன் முன்வந்துள்ளார்.

இவ்விரு நகரங்களிருந்தும் ஒருவாரகாலத்துள் இவர்கள் வெளியேற்றப்படுவார்கள், எனினும், பெத்தலஹேம், றமழா ஆகிய இருநகரங்களிலுள்ள இஸ்ரேலியர்கள் அவ்விடங்களை விட்டு எவ்வித காரணம் கொண்டும் வெளியேற்றப்பட மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அண்மையிலும் ஐக்கியநாடுகள் சபையின் தலையீட்டினால் பலஸ்தீன இருநகரங்களிலுள்ள இஸ்ரேலியர்கள் வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ–8)

கப்பல் கட்டும் தளத்தில் கடல்நீர் உட்புகுந்தது

(சென்னை)

டுபாயில் பாரிய கப்பல் கட்டும் தளத்திலே கடல் நீர் உட்புகுந்ததால் ஏற்பட்ட விபத்தில் மரணமானோரின் 13 சடலங்களை சுழியோடிகள் மீட்டுள்ளனர்.

இவ் விபத்தில் மரணமான 23 பேரும் எந்த நாட்டை சேர்ந்தவர்கள் என்பதை இன்னும் வெளியிடவில்லை.

எனினும், ஆசிய நாட்டவர்களே அங்கு கூடுதலாக வேலை செய்ததாக தெரிவிக்ப்படுகின்றது. (உ-5)

100 ஆண்டுகளின் பின் உரிய இடத்தை அடைந்த தபாலட்டை

(லண்டன்)

இங்கிலாந்தில் அனுப்பப்பட்ட தபாலட்டை ஒன்று 100 ஆண்டுகள் கால தாமதமாக உரிய முகவரிக்கு போய் சேர்ந்துள்ளது.

இங்கிலாந்தின் மன்னர் எட்வேட் ஆட்சி செய்த காலமான 1901-1910 ஆண்டுக்களில் ஜீன் என்ற பெண்மணி சீற்றின் மெர்சி என்னுமிடத்திலுள்ள செல்விறிலி என்னும் பெண்ணுக்கு இந்த தபால் அட்டையை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்ததபால்அட்டையில் இங்கிலாந்தின் 7 வது எட்வேட் மன்னரின் உருவதபால் தலை பொறிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

குஜராத் முதலமைச்சர் பதவி நீக்கப்பட வேண்டும் ஜெயாவும் இதற்கு ஆதரவு

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் நரேந்திரமோதி பதவிநீக்கம் செய்யப்படுவது வரவேற்கத்தக்கது என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம்சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குஜராத்தில்இப்போது தேர்தலை நடத்துவதற்கு எந்த விதமான அவசியமும் இல்லை என்றும் அங்கு அரசு மாற்றம் மாத்திரமே தற்போதைய தேவையெனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு முதலமைச்சரின் இக்கருத்தை இந்தியப்பிரதமர் வாஜ்பாய்புதுடில்லியில் செய்தியாளர்கள் முன்னிலையில் பேசும் போது மறுத்திருக்கிறார்.

முதலமைச்சர் தலைமையிலான அ. இ. அ. தி. மு. க தேசிய ஜன நாயகக்கூட்டணியாக இல்லை என்பதால்தான் இது குறித்து கவலைப்படவில்லை எனவும்பிரதமர்தெரிவித்துள்ளார். (எ-8)

ஆப்கான் முன்னாள் தலைவரின் 29 வருட அஞ்ஞாத வாசம் முடிவுக்கு வந்தது

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் முஹமட் ஷாஹிம்ஷா 29 வருட அஞ்ஞாத வாசத்தை முடித்துக் கொண்டு நேற்றுஇத்தாலியில் இருந்து ஆப்கான் திரும்பியுள்ளார்.

87 வயதான முன்னாள்மன்னர்ஷாஹிம்ஷாஅரியணையில் இருக்கும் ஆசை தனக்கில்லை என்றும்,மூத்த அரசியல்வாதியாகவும் தேசியஒருமைப்பாட்டின் சின்னமாக இருக்கும் நோக்குடனேயேஆப்கான் வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

நேற்று பலத்த பாதுகாப்புடன் காபூல் விமான நிலையத்தில் இறங்கிய மன்னரின்வருகையை முன்னிட்டு காபூல் நகரெங்கும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. (உ-7)

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்.

-குறள்

வலம்புரி

அன்னை பூபதியின் தியாகம்

காந்தியத்தின் தேசத்திற்கு அகிம்சையைப் புகட்டிய தியாகி திலீபனின் வரிசையில் உண்ணா நோன்பிருந்து தன்னுயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவு நாள் இன்று. தான் வாழ தன் உறவுகள் வாழ என்று போட்டி போடுகின்ற இந்த உலகத்தில் தமிழ்த் தேசம் வாழ ஓர் தமிழ்த் தாய் ஊன் உறக்கம் மறந்து அகிம்சை வழியில் நீதி கேட்ட அற்புத வரலாறு சங்க இலக்கியங்களில் தேடினும் கிடைத்தல் அரிது.

அத்தகைய அற்புதமான ஓர் தமிழ்த் தாயின் நினைவை 14 வது ஆண்டில் யாழ்ப்பாணத்து மண்ணில் நினைவு கூர முடிவது தியாகத்தின் அறுவடை என்றே கூறவேண்டும்.

போராட்டங்கள் உலகின் பல பாகங்களில் நடைபெற்றுள்ளது. ஆனால் ஈழப் போராட்டம் வித்தியாசமானது. இங்கு ஆயுதங்கள் மட்டும் போராட்டத்தோடு உறவு கொள்ளவில்லை, அகிம்சையும் உறவு கொண்ட போராட்டமாக ஈழப் போராட்டம் பரிணமித்திருந்தது.

அந்த அகிம்சை வழியில்– ஆத்மார்த்தமாக விடுதலையின் பாதையில் புனிதப் பயணத்தை மேற்கொண்ட இருவரில் அன்னை பூபதியும் ஒருவர்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் வரிசையில் அன்னை பூபதி ஒருபடி மேலேசென்று தனியொரு பெண்ணாக தன் தியாகத்தை இந்திய தேசத்திற்கு காட்டினார்.

காந்தியம் பேசிய பாரதம் தியாகி திலீபனுக்கு முன்னால், அன்னை பூபதிக்கு முன்னால் வெட்கித் தலை குனிந்து போனது.

தமிழ்ழத்தின் விடுதலைப் போராட்டத்திற்குப் பின்னால் இருக்கக் கூடிய தியாகங்களை ஒரு கணம் உற்று நோக்கினால் இந்தப் பிரபஞ்சமே அதற்குள் அமுங்கி விடும்.

தமிழின் உரிமைக்காகத் தியாகம் செய்து தன்னுடலை மண்ணில் விதைக்கும் மனத்திடம் வயோதிபத்திலும் தமிழ் மாதரசியிடம் இருந்தது என்பதை எண்ணும் போது தமிழ்த் தேசம் ஒரு கணம் நின்று அன்னை பூபதியை நினைந்து செல்கிறது. இஃது வரலாற்றில் பதிவாகிவிட்ட தியாகம் என்றும் நிலைத்து நிற்கும்.

திருஞானசம்பந்தரின் தெய்வத் தமிழ்மாலை

வாழ்வியலைச் செம்மைப்படுத்தி வழிகாட்டும்



சைவமும் தமிழும் ஒன்றோடு ஒன்றாய் இணைந்தவை. வேறு வேறாகப் பிரித்து நோக்கமுடியாதவை என்பதை உலகுக்கு நன்கு உணர்த்தியவர் ஞானசம்பந்தர். வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கத் தொண்டு செய்தவர், மனித வாழ்வியலின் சீர்மையை நெறிப்படுத்தியவர். செந்தமிழின் வரம்பிலா ஆற்றலை வெளிப்படுத்தியவர், மூன்றாம் வயதிலேயே இறையன்பை உணர்ந்து தேவாரம் பாடியவர். சிவபாத விருதயருக்கும் பகவதியாருக்கும செல்வக் குழந்தையாய்ப் பிறந்தவர், தூய திருநீற்றின் ஒளி சிறக்கப் பணிசெய்தவர், உமையம்மை ஊட்டிய திருமுலைப்பால் உண்ட பேற்றினால் ஞானசம்பந்தனாய் ஆனவர். வளமான தமிழ் மொழியால் பக்தி நெறியை வளர்த்தவர். வழிபாட்டு நெறி நின்று மனிதப் பிறப்பினை அதன் மாண்பினை யாவரும் உணரச் செய்தவர், ஒரு நெறியிலே நின்று ஞானசம்பந்தன் உரைசெய்த தமிழ் 'திரு நெறிய தமிழ்' என்ற புகழ் பெற்றது. இன்னிசை ஏழும் இசைந்த செழுந் தமிழை அவர் பாடல்களில் அனைவரும் சுவைக்க வழி செய்தவர்.

தமிழ் மாலை

சம்பந்தருடைய தமிழ்ப் பணியை இன்று மீள்நோக்குச் செய்யுமிடத்து அது மக்களை ஒருங்கிணைக்கும் ஓர் ஆற்றல் பெற்ற கருவியாக இருந்ததை நன்கு உணர முடிகிறது. கலை உணர்வுடன் இசையோடு இணைந்த பாடல்களால் இறைவனை அவர் பாடிய முறைமை வழிபாட்டின் வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்தியது, இறைவன் கோயில் கொண்ட தலங்களை நேரில் சென்று தரிசிக்கும் தெய்வீக நினைப்பை ஊட்டியது. கைத்தாளம் ஒலிக்க கோவிலை வலம் வந்து பண்ணிசையால் ஞானசம்பந்தர் பாடிய செந்தமிழ்ப் பாடல்களின் தொகுப்பு முதலாந்திருமுறை, இரண்டாம் திருமுறை, மூன்றாந்திருமுறை என மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளது. பத்துப் பாடல்களாகப் பதிகம் என்ற அமைப்பிலே தமிழ்மாலை

வெள்ளி நற்சிந்தனை

தவர், மனித வாழ்வியலின் சீர்மையை நெறிப்படுத்தியவர். செந்தமிழின் வரம்பிலா ஆற்றலை வெளிப்படுத்தியவர், மூன்றாம் வயதிலேயே இறையன்பை உணர்ந்து தேவாரம் பாடியவர். சிவபாத விருதயருக்கும் பகவதியாருக்கும செல்வக் குழந்தையாய்ப் பிறந்தவர், தூய திருநீற்றின் ஒளி சிறக்கப் பணிசெய்தவர், உமையம்மை ஊட்டிய திருமுலைப்பால் உண்ட பேற்றினால் ஞானசம்பந்தனாய் ஆனவர். வளமான தமிழ் மொழியால் பக்தி நெறியை வளர்த்தவர். வழிபாட்டு நெறி நின்று மனிதப் பிறப்பினை அதன் மாண்பினை யாவரும் உணரச் செய்தவர், ஒரு நெறியிலே நின்று ஞானசம்பந்தன் உரைசெய்த தமிழ் 'திரு நெறிய தமிழ்' என்ற புகழ் பெற்றது. இன்னிசை ஏழும் இசைந்த செழுந் தமிழை அவர் பாடல்களில் அனைவரும் சுவைக்க வழி செய்தவர்.

தமிழ் மாலை

சம்பந்தருடைய தமிழ்ப் பணியை இன்று மீள்நோக்குச் செய்யுமிடத்து அது மக்களை ஒருங்கிணைக்கும் ஓர் ஆற்றல் பெற்ற கருவியாக இருந்ததை நன்கு உணர முடிகிறது. கலை உணர்வுடன் இசையோடு இணைந்த பாடல்களால் இறைவனை அவர் பாடிய முறைமை வழிபாட்டின் வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்தியது, இறைவன் கோயில் கொண்ட தலங்களை நேரில் சென்று தரிசிக்கும் தெய்வீக நினைப்பை ஊட்டியது. கைத்தாளம் ஒலிக்க கோவிலை வலம் வந்து பண்ணிசையால் ஞானசம்பந்தர் பாடிய செந்தமிழ்ப் பாடல்களின் தொகுப்பு முதலாந்திருமுறை, இரண்டாம் திருமுறை, மூன்றாந்திருமுறை என மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளது. பத்துப் பாடல்களாகப் பதிகம் என்ற அமைப்பிலே தமிழ்மாலையாக கோவில் வரலாற்றையும் மக்களது வழிபாட்டு நெறியையும் இசை மாலையாக இனிமையாக எடுத்துக் கூறியது, ஞானசம்பந்தர் பாடிய 'தமிழ் மாலை' இறைவனுக்குச் சூட்டிய பக்தி மாலையாக விளங்கியது. ஆனால் அவர் சூட்டிய மாலை இறைவனுக்கு அன்று நிவேதனமாகி இன்று எமக்குக் கிடைத்துள்ளது. ஏட்டுச் சுவடிகளிலே எழுதப்பட்ட அந்தப் பாடல்கள தொழில் நுட்பத்தினால் நூல் வடிவு பெற்றுள்ளன, தமிழ்ச் சொற்களைத் தெரிந்தெடுத்து அழகுறத் தொடுத்துள்ள தமிழ் மாலை தமிழர் யாவரும் அணிந்து கொள்ளும் நல்ல மாலையாக உள்ளது. கோவிலைப் பற்றிய பதிகம் அந்தப்பிரதேசத்து மக்கள் அணியும் மாலையாக அன்றி உலகிலுள்ள அனைவருமே அணிந்து தம்மை அழியாத அழகுடையோராக ஆக்கவல்ல அன்பு மாலையாக உள்ளது. இந்த அன்பு மாலையில் தொடுக்கப்பட்ட நறுமலர்களாகத் தமிழ்ச் சொற்கள் விளங்குகின்றன. ஞானசம்பந்தர் தான் பாடிய பதிகங்களிலே அமைத்த முத்திரைக்கவியிலே பதிகத்தை 'தமிழ்மாலை' என்றே குறிப்பிட்டுள்ளார்.

'முகில்சேர்தரு முது
குன்றுடை
யானைமிகு தொல்சீர்ப்
புகலிநகர் மறைஞானசம்
பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக
ளிசையோடிவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர்
பாவம்மடை யாவே'

மலர்ப்பண்பாடு

இயற்கை நிலையில் வண்ண மலர்களால் தொடுக்கப்படும் மாலை பல்வேறு நிலைகளில் பயன்படுகிறது. மணமாலை' பிணமாலை, புகழ்மாலைஎன மனிதருக்கு அணிவிக்கப்படுகிறது. மலர்மாலை பொது நிலையால் இறைவனுக்குவழிபாட்டு நிலையில் சாத்தப்படுகிறது. இறைவன் கோல அழகினை அனைவரும் காண வேண்டும் பூமாலைபுனைந்து ஏத்தும் மரபைநம்முன்னோர் தொடக்கிவைத்துப் போனார்கள். அதனைதிருநாவுக்கரசர் தனது சொல்மாலையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

'நிலைபெறுமா றெண்ணு
தியே னெஞ்சே நீவா
நித்தலு மெம்பிரானுடைய
கோயிலுக்குப்
புலர்வதன் முன்னலகிடடு
மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப்
புகழ்ந்து பாடித்
தலையாரக் குமபிட்டுக்
கூத்துமாடிச்
சங்கராசய போற்றி
போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை
யெம்மாதீ யென்று
மாரூரா வென்றெனறே
யலறாநிலலே

வழிபாட்டு நடை முறைகளில் பூக்களால பூமாலை புனைந்து இலறைவனுககுச் சாததுவது முககியயாக இருந்தது மலாப பண்பாடு சிறபபுறறிருநத காலம சம்பந்தர் வாழநத காலம். கோயிலைச் சூழ அழகிய பூங்கா அலையநதிருந்தது. பருவகாலத்துககு ஏறப மலரும மலர்களை மாலையாகக இலறைவனுககு சாத்தி மனநிலைறவு பெறறனா. வெணணிற மலர்கள, செந்நிற மலர்கள, மஞ்சள நிற மலர்கள, நீலநிற மலர்கள எனப் பலவேறு நிற மலர்களும் இடையே பச்சிலை வைத்து தொடுககப்படடன. அதனால, 'தொடையெ னஅது அழைக்கப்பட்டது. கண்ணுககு இனிய கவின் கோலத்தைச் மலர்கள தந்தன. சமபந்த அத்தகைய இலறைவனுடைய கவின் கோலதைத சொற்களால் எடுத்துக கூற விழைந்தார், பல சொலமாலைகளைப் புனைந்தார். அவை சிறந்த தமிழ் மாலைகளாக விளங்கின. சோழ நாடு, ஈழ நாடு, பாண்டிய நாடு, மலைநாடு, கொங்கு நாடு, நடுநாடு, தொண்டைநாடு, துளுவ நாடு, வடநாடு, எனப பல்வேறு நாட்டுத் தலங்களையும் சொல்மாலையால் அணிசெய்தார். அனபு நெறியை உணர்த்த தலங்களில நடந்த அறபுதங்களை பாடல்களிலே பாடினார். தலவரலாறும் மக்களின தொடரபும் சொல்மாலைகளிலே புனையப் பட்டன. கூறுபடுக கிடந்த நாடுகளை இச் சொல்மாலைகள மீண்டும பக்தி நெறிவழி நின்று ஒற்றுமைப்படுத்தின.

பக்தி நெறியின் வலு

பக்தி நெறியின் வலுவை மக்கள உணர முற்பட்ட போது வேற்றுமைகள ஒழிந்தன. சமநிலையானபோககுக்

(2ம் பக்கம் பார்க்க)

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இசைமாலை தமிழ் வேதம்

தமிழ்மொழியின் ஆற்றலைச் சம்பந்தர் சிறப்பாகவே உணர்த்தியுள்ளார். அவர் வாழ்ந்தகாலத்தில் வடமொழிச் செல்வாக்கும் தமிழிலே பதிந்திருந்தது. அச்செலவாக்கினால் தமிழ் மொழியின் பயன்பாட்டிலே மாற்றம் ஏற்படலாயிற்று. மக்கள் பேசும் தமிழிலே வடசொற்கலப்பும் வந்து சேரலாயிற்று. பிறமொழிக்கலப்பைத் தடுத்துத் தமிழ்மொழியின் இயல்பான பயன்பாடடை மக்கள் மனதிலே பதிய வைக்க சம்பந்தர் பதிகம் பாடினார், வழிபாட்டு நெறியிலே தமிழ் வேதம் என்ற நிலையிலே தேவாரங்களால் மக்களின் தமிழ்மொழி உணர்வைத் தட்டியெழுப்பினார். இசையோடு சேர்ந்த இனிய தேவாரப்பாடல்களைப் பாடி கோவிலை வலம் வந்து வணங்கும் மரபைத் தொடக்கிவைத்தார். கூட்டு வழிபாடு எனனும புதிய வழிபாட்டு முறையைககு இசையோடு இணைந்த தமிழ் மாலை பெரிதும உதவியது. மக்கள உளளத்திலே இசை பற்றிய விருபபு ஏற்படலாயிற்று பொழுது போக்கு நிலையில அன்றி அனபு நிலையில அனைவரையும அது ஒனறிணைய வைததது கோவில எனனும் அமைபபின இனறியமையாமையை தமிழ் மாலை உணாத்திற்று மககள அனைவரும ஒரு பிபாது நெறி செனறு ஒறறுமையாய் செயறபட உதவறறு. தமிழ்மொழியால் அனைவரையும ஒனறிணைத்து உனனதமான வாழ்வியலை நடத்தலாம எனபதை உலகிறகு முதன முதலில் எடுததுக காடடியவர் திருஞானசம்பந்தரே. அவர் தனனுடைய முத்திரைக் கவியில இதனைக குறிப்பிட்டுளளார்.

ஞாழல் கமழ்காழி
யுண்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ
ரதிலகவீரட டானததுச்
சூழுங் கழலானைச்
சொனன தமிழ்மாலை
வாழுந் துணையாக
நினைவபர் வினையிலரே

உற்ற துணை

மனித வாழ்க்கைக்கு ஒரு பற்றுககோடு தேவை, ஆனால அது மனிதர் எலலோருககும ஏறறதாக அமையவேணடும். தனிதது வாழவேண்டிய சூழ்நிலையிலும் உற்றதுணையாக அது நிறகவேணடும். எனவே வாழுந்துணையாகச் சம்பந்தர் தனனுடைய தமிழ்மாலையைச சுட்டுகிறார். அவர் செய்த நிகரில்லாத தமிழ் மாலை சொல்லார் மாலை செந் தமிழ்ப்பனுவல்மாலை அதனை இசையோடுபாடவல்லவர்கள் பூமலிவானவரோடு பொன்னுலகில் பொலிந்து வாழ்வர். கோலம்மிக்க தமிழ் மாலை சொல்மாலையாக மககள் வாயில் பொலியும் மாலை செம்மையான் சொற்களைத் தெரிந்து தமிழின் ஒலிகெழு

தினசரி தியானம்

வித்து

வித்தன்றி யாதும்
விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ
செப்பாய் பராபரமே.

- தாயுமானவர்

எண்ணியதை எண்ணியாங்கு அளிக்கவல்ல நுண்பொருளே, நின்னையே நான் யாண்டும் எண்ணியிருப்பேனாக.

விதையிலிருப்பது எதுவோ அது பிறகு மரமாகப் பரிணமிக்கிறது. நமக்கு மனதிலிருக்கும் எண்ணமே வித்து. வெளியுலகில் தென்படும் இன்பதுன்பங்களே அதன் விளைவு. மனதில் இல்லாததை வெளியுலகில் நாம் காண முடியாது. மனத்தை நல்ல மனமாக மாற்றுமளவு வெளியுலகும் நல்லதாக நமக்கு மாறிவிடுகிறது. பெருவாழ்வுக் கேற்ற நல்ல வித்து நம் மனதினூடு உள்ளது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

யாழ்ப்பாணப் புனரமைப்புக் குறித்து யப்பானியத் தூதுவர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் சியிக்சிறோ ஒத்சுகா நேற்று யாழ். பொதுசன நூல் நிலையக் கட்டடத்தை சென்று பார்வையிட்டார்.

அவருடன் அவரது செயலாளர்களான நொறிக்கோ இசெகி, மசாரோமி ஒக்காவா ஆகியோரும் வருகை தந்தனர்.

பொதுசன நூல் நிலைய முன்றலில் யாழ்.மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையன் தூதுக் குழுவினரிற்கு மாலை அணிவித்து வரவேற்றார்.

புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நூல் நிலையக் கட்டிடத்தைப் பார்வையிட்ட ஜப்பானியத் தூதுவர் தான் யாழ்பாணத்திற்கு இப்போது தான் முதற்த் தடவையாக விஜயம் செய்துள்ள்தாகத் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.மக்களின் தேவைகள், அவர்களின் புனர் வாழ்விற்கு எத்தகைய உதவிகள் தேவை என்பன குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

இதேவேளை யாழ்.அரச அதிபர் கே.சண்முகநாதனுடன் கலந்துரையாடிய தூதுக்குழுவினர் பிற்பகல் யாழ்.போதனா வைத்திய சாலை மற்றும் யாழ் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்தனர். (எ)

மில்க்வைற்
கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்
மில்க்வைற் சோப்
இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

யாழ். பல்கலைக்கழகத்திற்கு ரவிதமிழ்வாணன் நூல்அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மறைந்த பிரபல தமிழக எழுத்தாளர் "கல்கண்டு" தமிழ்வாணனின் மகன் ரவிதமிழ்வாணன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ் வந்த இவருக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலமையில் நடைபெற்ற இவ் வரவேற்பு விழாவில் "கடற் கன்னி காவியம்" எனும் நூலை ரவிதமிழ்வாணன் வெளியிட்டு வைத்தார். இந் நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ் வருகையின் மகிழ்வாக ரவிதமிழ்வாணன் யாழ் பல்கலைக்கழகத்திற்கு 51ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

இதனை இந்து கலாசார அமைச்சர் பெற்று, துணைவேந்தரிடம் கையளித்தார்.

அத்துடன் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம் படிப்பகத்திற்கு 6ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ துணைத் தலைவர் க. தேவராஜாவிடம் தமிழ்வாணன் கையளித்துள்ளார். (இ-19)

யாழ் கொழும்பு...

இருந்து தமிழீழ போக்கு வரத்துக் கழக பஸ் ஓமந்தை வரை ஏற்றிச் செல்லும்.

முகமாலையில் இருந்து ஓமந்தைவரை பயணிகள் இன்றி தமிழீழ போக்குவரத்துக்கழக பஸ்சிற்குப் பின்னால் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ் செல்லும்.

மேற்படி பஸ் ஓமந்தையில் பயணிகளை மீண்டும் ஏற்றிக் கொண்டு கொழும்புவரை செல்லும் என்று போக்குவரத்து ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

அன்னை பூபதியின்...

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு, மகளிர் பிரிவு பிரமுகர்கள், மனித நேய அமைப்புப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் உட்பட பல பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்த உள்ளனர்.

இந்நிகழ்வில் நீண்ட காலத்தின் பின் ஈழத்தின் பிரபல இசைக் குழுவின் முன்னணிப் பாடகர்கள், கலைஞர்கள் கலந்துகொள்ளும் இசை நிகழ்சிகளும் இடம் பெறவுள்ளன.

அன்னை பூபதியின் நினைவுதின நிகழ்வில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு வீடு திரும்புவதற்கு வசதியாக இலங்கை போக்குவரத்து சபையினர் சகல பாதைகளுக்குமான தமது போக்குவரத்துச் சேவையை இரவு 8.30 மணிவரை நீடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

புலிகளின் தடையை...

தெரிவித்துள்ளதுடன், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டாலும் சர்வதேச ரீதியில் அது எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸனிடம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் புலிகள் மீதான தடையை முழுமையாக நீக்கினால் அன்றி விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தடையை இலங்கையில் நீக்குவதால் எந்தப் பின்விளைவும் ஏற்படாதென்றும் புலிகளின் தடையை நீக்குவதற்கு சட்டம் இடம்கொடுப்பதாகவும் சட்டவல்லுனர்கள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளனர் (வ)

புத்தக விற்பனைக் கண்காட்சி

(கொழும்பு)

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள சிவத்தமிழ் அன்னை தமிழ் ஆய்வு நூலகத்தில் இன்று காலை 6 மணி முதல் புத்தக விற்பனைக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

புத்தக விற்பனைக் கண்காட்சியை மணிமேகலை பிரசுர நிறுவன இயக்குநர் ரவிதமிழ்வாணன் ஆரம்பித்து வைப்பார். (த)

புலிகள் கூட்டணி...

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் தளபதி பாப்பா, கலைப் பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உட்பட புலிகள் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (த-43)

நோர்வேத் தூது...

தாய்லாந்துப் பேச்சுவாத்தையில் கலந்து கொள்வதற்கு விடுதலைப் புலிகள் இடமளித்ததை நோர்வேக் குழுவினர் மகிழ்ச்சியுடன் பாராட்டியுள்ளனர்.

முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்குச் சென்ற தூதுக் குழுவினர் மட்டக்களப்பில் இடம் பெற்றுவரும் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாகவும், கண்காணிப்புப் பணிகளில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுத் தரப்பு தயக்கம் காட்டிவருவதாக மட்டக்களப்பு மாளவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், ரி.தங்கவடிவேல், ஞா.கிருஷ்ண பிள்ளை, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் சந்திரநேரு அரிய நாயகம் ஆகியோர் நோர்வேக் குழுவினரிடம்எடுத்துக்கூறினர். (த)

விடுதலை செய்யக்கோரி மன்னார் கைதிகள் மகஜர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பயங்கரவாதச்தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 13 சந்தேகநபர்கள் தம்மீது விசாரணைகளை மேற்கொள்ளுமாறும்; விசாரணைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் தம்மைப் பிணையில் விடுமாறும் கோரி மன்னார் நீதவான் முகமட்டுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட் இந்த 13 சந்தேகநபர்களும் கடந்த 3 வருடங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

13 சந்தேக நபர்களின் மகஜரைப் பெற்றுக்கொண்ட நீதவான் முகமட் அதனை சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனுக்கு அனுப்பி வைத்துள்ளார். (வ)

விடுதலைப் புலிகள்...

முன்னணி அரசு புலிகள் மீதான தடையை நீக்குமாயின் அதற்கு எதிர்ப்பினைக் காட்டுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயங்காது.

தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் முன்வைக்கப்பட்டவையே என்றும் அவர் கூறினார். (த)

மட்டக்களப்புக் கைதிகளின் உண்ணாவிரதம் முடிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த 36தமிழ் அரசியற் கைதிகள் நேற்றையதினம் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் உறுதி மொழியினை அடுத்தே அவர்கள் தமது உண்ணாவிரதத்தினைக் கைவிட்டுள்ளனர்.

இதேவேளை நீர்கொழும்புச் சிறையில் உள்ள 16தமிழ் அரசியற் கைதிகளின் உண்ணாவிரதம் 3வது நாளாக இன்றும் தொடர்கிறது.(த)

தொண்டர் ஆசிரியர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்காளான சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் இருவரையும் சூழ்ந்து நின்று தங்கள் நிரந்தர நியமனத்தைக் கோரும் காட்சி

தொண்டர் ஆசிரியர்கள் யாழ் கல்வி வலயத்திற்கு முன்னால் பதாதைகளுடன் மறியற் போராட்டத்தில் ஈடுபடும் காட்சி

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கத்தின் 82வது ஆண்டு நிறைவு விழா சங்கத் தலைவர் ரி. சசிதரன் தலமையில் அண்மையில் நடைபெற்றது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றி வைப்பதையும் அருகில் சங்கத் தலைவர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

தியாகச் சுடர்
அன்னை பூபதி நினைவு தின நிகழ்வு

இடம் :- நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல்
காலம் :- இன்று (19.04.2002) வெள்ளிக்கிழமை
பி.பகல் 4.30 மணி.
தலைமை :- திரு.க.சி.சிவசீலன்
தலைவர்-மாணவர் ஒன்றியம்,
தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்

01. ஈகச் சுடரேற்றல்.
02. மௌன அகவணக்கம்.
03. மதத்தலைவர்களின் உரை.
04. தொழில் நுட்பக் கல்லூரி மாணவப் பிரதிநிதிகள் உரை.
05. உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றிய பிரதிநிதி உரை.
06. அன்னையர் முன்னணி பிரதிநிதி உரை.
07. தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் உரை.
08. யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதி உரை.
09. யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் உரை.
10. யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் உரை.
11. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகள் உரை.
12. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் அணி அரசியல் பிரிவு பொறுப்பாளர் உரை.
13. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் உரை.
14. நன்றியுரை-செயளாளர், யாழ்.தொழில் நுட்ப கல்லூரி மாணவர் ஒன்றியம்.
15. இசை நிகழ்ச்சி.

நீண்ட காலத்திற்குப் பின் தமிழீழத்தின் தலைசிறந்த கலைஞர்கள் பங்குபற்றும் இசை நிகழ்ச்சி நடைபெறும்.
அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

[C/3986] விழா ஏற்பாட்டு குழு

ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், பிரியங்கா சோப்ரா,
விவேக் நடித்த
தமிழன்
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]

நாகம்ஸ்-சுன்னாகம்
இந்தியாவிலும் நாகம்ஸ்
சினிமாவிலும் ஒரே தின வெளியீடு
டொப்ஸ்டார் பிரசாந்த்,
சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ்
தினசரி 11.00, 3.00, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.